152

152

பாசறை

1

P. NATESAN & Co. Ltd.

Electrical and Civil Engineers
Military Contractors

All kinds of Electrical and Civil works undertaken

Head Office:

10, Mount Road, Madras

Branch:

12/3, Frazer Square, Coimbatore

பாசரசு

மாதம் ஒரு புத்தகம்

894.8113

பதிப்பாசிரியர் :

எம். எஸ். பாசு

(பாசரசு)

2249

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - MAY 1944
MADRAS

பாசரசு காரியாலயம்

பெரம்பூர் :: சென்னை

1944

03113

இந்த இதழில்

		பக்கம்
பாசரசு		3
வீர விழிப்பு	சுவாமி சுத்தானந்த பாரதியார்	5
வயது வந்துவிட்டது	கு. ப. ராஜகோபாலன்	6
நண்பரும் விருந்தும்	ஆர். திருஞானசம்பந்தம்	12
மனோரதம்	கே. ஸ்ரீ.	15
மாங்கல்யம்	ஸ்ரீமதி கோமதி சுப்ரமண்யம்	24
இடிந்த வீடு	ஸ்ரீமதி சரசுவதி பாசு	31
சிந்தாமணி	இனியன்	37
குழந்தையின் தாய்	"சுகி"	45
மனமே காரணம்	பெ. தூரன்	53
மிட்டாய்க்காரன்	"பாசரசு"	58

எல்லா உரிமைகளும்

பதிப்பாசிரியருக்கே

மலர் : 1 :: அணு 12

பாசரசு

* * *

தமிழ் நாட்டில் இப்பொழுது கலைக்கு மறு மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் தமிழில் எழுதுவது பேசுவது என்றால் மதிப்பில்லாமல் இருந்தது. இப்பொழுது தமிழ் மொழிக்கே அதிர்ஷ்டம் அடிக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது. தமிழில் புதுப் புதுப் புத்தகங்கள் புதுப் புது மாதிரிகளில் தோன்றித் தமிழ் நாட்டில் புதிய எழுத்தாளர்களைத் தோற்றுவிக்கின்றன.

தமிழில் எழுத முடியும்; தமிழில் விஞ்ஞான சாஸ்திரம் முதல் எல்லா சாஸ்திரங்களையும் தெளிவாக எழுதலாம் என்ற சக்தி நாடு முழுதும் ஏற்பட்டுவிட்டது. ருஷியாவில்தான் சிறந்த சிறு கதை எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். சிறு கதை அங்குதான் பூரண மலர்ச்சியுடன் நாடெங்கும் மணங் கமழ்கிறது. இப்பொழுது ருஷியா தேசத்துக்கு அடுத்தப்படியாகத் தமிழ் நாட்டில்தான் சிறு கதைகள் பூரணப் பொலிவுடன் மலர்கின்றன.

யுத்த நிலைமை காரணமாக, காகிதப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. காகிதம் கிடைப்பது ஒரு குண்டு சவுக்கு விறகாக இருக்கும் இந்த நாளில் தமிழ்ப் புத்தகம் மாத்திரம் பஞ்சமில்லாமல் வெளிவருகிறதற்குக் காரணம் தமிழ் மக்களிடம் இப்பொழுது ரஸிகத் தன்மை பஞ்சமில்லாமல் வளர்ந்திருப்பதுதான். புத்தகம் எழுதிவிட்டால் மட்டும் போதுமா? அதை ஆர்வமுடன் படித்து ரஸிக்க ரஸிகர்கள் வேண்டுமல்லவா? ஆகையால் கலை வளர்ச்சிக்கு முக்கிய காரணம் ரஸிகர்கள்தான்.

ஒரு பாஷை சிறந்து வளரவேண்டுமானால், எல்லோரும் படித்துணரக்கூடிய இனிய எளிய நடையில்

பல புத்தகங்கள் வெளிவரவேண்டும். கலை, இலக்கிய வளர்ச்சிக்கு இதுதான் முடிவு என்று வரையறுக்க முடியாது. எவ்வளவு வேண்டுமானாலும் வளரலாம். இப்பொழுது தமிழ் நாட்டில் அநேக 'மாதம் ஒரு புத்தக'ங்கள் தோன்றி இலக்கிய சேவை செய்து வருகின்றன. அவைகளுடன் "பாசரசு"ம் மாதம் ஒரு புத்தகமாக ஒவ்வொரு தமிழ் மாத முதல் தேதியும் வெளிவரும்.

"பாசரசு" இலக்கிய சேவையில் பிரமாதமாக ஈடுபட்டுவிடும் என்று கூற நான் தயாராயில்லை. கதை, கட்டுரை, கவிதை, நாடகம் முதலிய சிறந்த விஷயங்களைத் தாங்கி வெளிவரும். சிறந்த எழுத்தாளர்கள் பலர் ஒவ்வொரு மாதமும் விஷயதானம் புரிவார்கள். எழுத்தாளர்களின் விஷயதானத்துக்குச் சன்மானம் அளிக்கத் தீர்மானித்துள்ளேன்.

"பாசரசு"க்கு யார் வேண்டுமானாலும் எழுதலாம். விஷயம் நன்றாயிருக்கவேண்டும் என்பதுதான் நிபந்தனை.

"பாசரசு" வெளிவருவதற்கு எனக்கு உற்சாக மூட்டி, ஊக்கமளித்த என் நண்பர்கள்—அவர்கள் விரும்பாவிட்டாலும் என் நன்றியை நான் தெரிவித்தாகவேண்டும்—ஸ்ரீமான்கள்: ஆர். ஷண்முகசுந்தரம், ஆர். திருஞானசம்பந்தம், ஏ. கே. சந்திரசேகர முதலியார், டி. வி. வாசுதேவன், டி. வி. அனந்தகிருஷ்ணன், ராஜா, டி. வி. ராமனுத், டி. என். இனியன், ஸோமாஸ் முதலியவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றி. முக்கியமாக என் பெற்றோர், என் சிறிய தந்தையார், என் சஹதர்மிணி, என் வேலையின் நடுவே தொந்தரவு கொடுக்காத என் குழந்தைகள் இவர்களுக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

குன்றத்தூர்,
4-4-44

எம். எஸ். பாசு.

வீர விழிப்பு

சுவாமி சுத்தானந்த பாரதியார்

விழித் தெழுந்துநில் வீரத் தமிழனே,
விண்ண திர்ந்திட வெற்றி முரசொலி
செழித் தெழிந்துநில் செய்ய தமிழனே,
சிறுமை தீமை பொருமைப் படைகளை
அழித் தெழுந்துநில் ஆண்மைத் தமிழனே,
அச்சப் பேயை அழுத்தி மிதித்தின்பந்
தழைத் தெழுந்துநில், உண்மைத் தமிழனே
'சக்தி' யென்றுசொல் சக்தி பெருகுவாய்!

மனித னுக்கு மனிதன் அடிமையோ?
வாழு மாந்தர் அவரவர் மன்னவர்;
கனி மரத்திற்குக் காய்க்கும் உரிமைபோல்,
கதிரி னுக்கொளி காந்து முரிமைபோல்,
மனதி னுக்கு நினைக்கும் உரிமைபோல்
மண் ணு யிர்க்கு வளரும் உரிமையாம்,
தனிய கந்தைகொண் டேபிறர் தாழ்வுறத்
தாக்குந் தீமை நலியத் தலைநிமிர்!

(பூபாள ராகம்)

வயது வந்துவிட்டது

கு. ப. ராஜகோபாலன்

களத்து மேட்டில் ஏறினதுமே எதிரே கண்ட காட்சியால் பிரமித்து நின்றுவிட்டேன். நான் அவ்வளவு நெருங்கி வந்துவிட்டதை அவளும் கவனிக்கவில்லை; குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

என்னைக் கண்டதும் அவள் சடக்கென்று குழந்தையை மார்பிலிருந்து எடுத்து மேலாக்கைச் சரி செய்துகொண்டு எழுந்து, "வாங்க! எப்ப வந்திங்க?" என்றாள்.

"வள்ளியம்மையா!" என்று நான் வாய்விட்டு ஆச்சரியப்பட்டுக்கொண்டு அவளைப் பார்த்தேன்.

அவள் புன்னகையுடன் தலைகுனிந்து, "ஆமாங்க அடையாளம் தெரியலையா?" என்றாள்.

"எவ்வளவு வருஷமாச்சு! சிற்றாடை கட்டித் திரிந்த வள்ளியைத்தானே பார்த்திருக்கிறேன்!"

"ஆமாங்க!" என்று அவள் தலையெடுத்து நகைத்து என்னை அன்புடன் பார்த்தாள்.

"கங்காணி எங்கே?"

"ஊட்டுக்கு போயிருக்காரு; உக்காருங்க," என்று களத்துமேட்டில் மாமரத்தடியில் போட்டிருந்த பழைய கயிற்றுக் கட்டிலைக் காட்டினாள்.

"குடிக்கத் தண்ணி இருக்காம்மா?"

"அப்பா வந்தா எளனி—"

"தண்ணி வேணும்!"

"பானேலே இருக்குதே!"

"தேவலாம் குடு, மின்னே எல்லாம் குடுக்கலையா?"

அவள் சற்றுத் தயங்கியபிறகு பானேயிலிருந்து ஒரு குவளே தண்ணீர் எடுத்துக்கொண்டுவந்து அருகில் வைக்கப்போனுள் நான் கையில் வாங்கிக்கொண்டேன்.

தான் மும்முரமாக ஈடுபட்டிருந்த வேலேயிலிருந்து தடுக்கப்பட்ட குழந்தை வெகு கோபமடைந்து உரக்க அழ ஆரம்பித்தான். அவனே அவள் அருகில் தொங்கிக் கொண்டிருந்த தூளியில் போட்டு ஆட்ட ஆரம்பித்தாள்.

"நீ எந்த ஊரிலே இருக்கிருய்?"

"சேலத்துலே—அவரு—முனிசிபாலிடிலே சேவகரு—"

"சேவுகரய்யா பொஞ்சாதியா நீ!" என்று சிரித்தேன். அவளும் மௌனமாகச் சிரித்தாள்.

வள்ளியம்மை பத்து வயதுப் பெண்ணுக இருந்தபொழுது எனக்கும் பத்துவயது. அவள் தகப்பன் கங்காணி என்று பெயர் பெற்ற ஆரான் எங்கள் நிலத்து குத்தகைக்காரன். அப்பொழுது ஒவ்வொரு விடுமுறைக்கும் நான் கிராமத்துக்குப் போவேன், என் தகப்பனருடன்.

அப்பொழுதெல்லாம் வள்ளி முரட்டுப்பெண். நல்ல கட்டுமஸ்தான தேகம். மரம் ஏறுவாள்; பெரிய கிணறுகளில் குதித்து நீந்துவாள். எதுவும் அவளுக்கு லட்சியமில்லே. சிக்குப் பிடித்த தலே மயிரை அள்ளிச் சொருகி இருப்பாள். காதுகளில் பூச்சிக்கூடு; மூக்கில் பொன் மூக்குத்தி; கையில் வெள்ளி வளேயல்கள். கையில் கம்புடன் மாடு மேய்ப்பது அவள் வேலே.

கன்னங்கரேலென்றிருந்த அவளுடைய முகத்தில் கருவிழிகளுக்கு வெளியே தென்படும் கண்களின்

வெள்ளைப் பாகங்களும் பற்களும்தான் பளிச்சென்று இருக்கும். எந்தெந்தக் காலத்தில் எது விளைகிறதோ அதை வயலிலிருந்து எடுத்துத் தின்றுகொண்டேயிருப்பாள். சோளம் விளைகிற காலத்தில் சோளக் கொண்டையும் கையுமாகத்தான் இருப்பாள்; கம்பு விளைகிற காலத்தில் கம்பங்கதிர்; வேர்க்கடலை காலத்தில் பச்சை வேர்க்கடலை; கரும்பு காலத்தில் கரும்புத் துண்டு. பருவ தேவதையின் உருப்போல அந்தந்தச் சின்னத்துடன் தான் இருப்பாள் எப்பொழுதும்.

ஒரு தடவை சோளப் பயிரிலிருந்து ஒரு கொண்டையை ஒடிக்க முயன்றேன். என்னால் முடியவில்லை. தண்டு என் கையைக் கீறிவிட்டது. அவள் உடனே தன் அருகிலிருந்த ஒரு கொண்டையை வெகுலாகவமாக ஒடித்து என்னிடம் கொண்டுவந்து கொடுத்தாள். மணிகளை உதிர்க்கத் தெரியவில்லை எனக்கு. அவள் உடனே அதை வாங்கி வெகு சீக்கிரத்தில் உதிர்த்து பிடி மணிகளை என்னிடம் கொடுத்தாள்—ஊதிப்பொட்டை அகற்றி.

அதிலிருந்து இருவரும் சிநேகிதர்கள். நான் கொண்டுபோயிருந்த பொம்மைப் புஸ்தகங்களையெல்லாம் அவளுக்குக் காட்டினேன். அம்மா கொடுத்த பெப்பர்மென்ட்களைக் கொடுத்தேன்.

தன் பிரதாபங்களை எல்லாம் அவள் என்முன் காட்ட ஆரம்பிப்பாள். மாடுகளையெல்லாம் வெகு அருகில் சென்று அடித்து கொம்புகளைப் பிடித்து இழுப்பாள். எனக்குத் திகிலாக இருக்கும். மாமரத்தில் ஏறிக் கொத்தோடு மாவடு பிடுங்குவாள்; கீழே விழுந்துவிடுவாளோ என்றுநான் கீழே நின்று தவிப்பேன். வழுக்கும் கிணற்றுப்படிகளில் வெகு சுலபமாக இறங்கி எனக்குக் குடிக்க ஜலம் கொண்டு வந்து கொடுப்பாள். அதில் குதித்து நீந்தி விளையாடுவாள். ஈரத்துணி ஒட்டின அவள் உடல் கருங்கல் சிலை போல இருக்கும். இளம் நுங்கை பனங்காயில் துருவி விட்டுக் குடிக்கச் சொல்லுவாள். நான் குடிக்கத் தெரியாமல் உடம்பெல்லாம் கொட்டிக்

கொள்ளுவேன். வள்ளியம்மை அழகாகச் சிரிப்பாள். பிறகு, தான் சாப்பிட்டுக் காட்டுவாள். விக்கிரகமே உயிர் பெற்று உலவுவதுபோல இருக்கும்.

காட்டுக்கொடி போன்ற அவள் முரட்டு வளர்ச்சியில் மென்மையும் தென்பட்டது. சிரித்தால் அவள் முகம் வடிவழகு கொள்ளும். அவள் குரல் மெல்லியதாயும் இனிமையாகவும் இருக்கும். உரக்கக் கத்தவே மாட்டாள். சிற்றுடை சூழ்ந்து மறைத்த அவள் அங்கங்களில் பருவம் பொங்க ஆரம்பித்துக் கொண்டிருந்தது.

நாங்கள் இருவரும் ஒருநாள் களத்துமேட்டில் விளையாடிக் கொண்டிருந்தபோது நான் விளையாட்டாக அவள் மேலாக்கைப் பிடித்து இழுத்துவிட்டேன். உடனே அவள் என்னை மல்லாக்கக் கீழே தள்ளிவிட்டாள். நான் உருண்டுகொண்டு களத்து மேட்டிலிருந்து வயல்சேற்றில் வந்து விழுந்தேன். நான் அவ்வளவு லேசாக விழுந்துவிடுவேன் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. திடுக்கிட்டு ஓடிவந்து என்னைப் பிடித்துத்தூக்கி என்மேலிருந்த சேற்றையெல்லாம் தன் முந்தானையால் துடைத்து, "என்னத்துக்கு மணி அந்த மாதிரி இளுத்தே!" என்று மன்னிப்புக் கேட்பதுபோலக் கெஞ்சினள்.

எனக்குக் கோபம். அவமானம். மௌனமாக மாமரத்தடியில் போய் உட்கார்ந்துகொண்டேன். வள்ளியம்மை சற்றுநேரம் சும்மா இருந்தாள். அங்கு போனள், இங்கு போனள். பிறகு என்னிடம் வந்து உட்கார்ந்துகொண்டு கண்ணீருடன் ஒரு கையை என் கழுத்தில் போட்டுக்கொண்டு, "எம் மேலே கோவமா?" என்று கேட்டாள்.

"போடி, உன்னைத் தெரியும்," என்று நான் ஒதுங்க முயன்றேன்.

வள்ளி என்னை இருகக் கட்டிக்கொண்டு முகத்தோடு முகம்வைத்து, "இனிமே இல்லே, மணி, என்னேடே பேசமாட்டியா இனிமே?" என்று கெஞ்சினள்.

பத்துவயதுதான் எனக்கு. அந்த இனிமை இசைத்த குரலும் மென்மை ஒட்டிய உடலும் சேர்ந்து என்னை நானே இன்னதென்று அப்பொழுது அறிய முடியாத ஒரு இன்பத்தில் ஈடுபடச் செய்தன.

அந்தப் புனிதமான பரவச நிலையில் நான் அவள் அணைப்பில் ஒடுங்கி, "பேசவே மாட்டேன், போ!" என்று சொல்லிச் சிரித்தேன்.

அவ்வளவுதான், சடக்கென்று என்னைவிட்டு எழுந்துஓடி, "பேசாட்டி போயேன்" என்று சொல்லிக்கொண்டு மாமரத்தில் ஏறப்போனாள்.

"இந்தா, வள்ளி. இங்கே வா, பேசறேன்," என்று நான் கத்தினேன்.

"மாட்டேன், போ; மரத்துலே ஏறி கீழே உளுந்து செத்துப்போறேன்," என்று பயமுறுத்தினாள்.

நான் எழுந்தோடிப்போய் அவள் மேலாக்கைப் பற்றி இழுத்தேன்.

கலகலவென்று நகைத்துக்கொண்டு, "உடு, உடு மணி," என்று கீழே குதித்தாள். நான் விடவில்லை.

வெகுநேரம் கட்டிலில் மெய்மறந்து உட்கார்ந்திருந்தேன். என்முன் நின்ற வள்ளி பழைய சூக்ஷ்ம ரூபத்துடன் என்னுடன் விளையாடுவது போன்ற பிரமை கொண்டேன்.

"என்னைச் சேற்றில் தள்ளினையே ஒருநாள், நினைவு வருகிறதா?" என்றேன் வெகுநேரம் கழித்து நினைவு வந்து.

அவளும் அவ்வளவு நேரம் மெய்மறந்திருந்தாள் போலிருந்தது. உலுக்கி விழுந்து, "என்ன மணி?" என்றவள் சட்டென்று திருத்திக்கொண்டு, "என்னுங்க?" என்று கேட்டாள்.

"சேற்றில் தள்ளிவிட்டு—" என்று ஆரம்பித்தேன். அவள் வெட்கத்துடன் முகத்தைத் திருப்பிக்

கொண்டாள்; ஆனால் அதில் தோன்றியிருந்த உணர்ச்சிச் சாயலை அவளால் மறைக்க முடியவில்லை.

"உன் முரட்டுத்தனமும் விளையாட்டும் எங்கோ போய்விட்டனவே!"

அவள் சிரித்துக்கொண்டே, "வயதாவில்லிங்களா?" என்றாள்.

"எங்கே அந்த மரக்கிளையில் இருக்கிற கொத்து மாவடுவை அப்படியே பறி, பார்ப்போம்."

"இப்ப நீங்கதான் பறிக்கணும்."

"சோளக் கொண்டையைத்தான் ஒடியேன்."

வள்ளியம்மை யௌவனத்தின் நிறைவு ஒவ்வொரு அங்கத்தின் அசைவிலும் தென்பட வனப்பே நடந்துபோவதுபோலப் போய் சோளக்கொண்டை ஒன்றைப் பறித்து உதிர்த்துக்கொண்டே வந்தாள்.

"அப்படியே ஒருவாய் சாப்பிடு, பார்க்கிறேன்!"

அவள் சாப்பிடவில்லை. உதிர்த்த மணிகளை என் கையில் கொட்டினாள்.

என் மனதிலிருந்ததைச் சொன்னேன்.

"முன்போல நாம் விளையாடுவதற்கு இடைஞ்சலாக—" என்று ஆரம்பித்தேன்.

"வயது வந்திருச்சால்லியா!" என்று சொல்லி அவள் அருகிலிருந்த கொல்லி மலைத்தொடர்ப் பக்கம் பார்த்தாள்.

அந்தப் பார்வையின் குறுக்கே சற்று தூரத்தில் அவள் தந்தையின் உருவம் தென்பட்டது.

"வள்ளி!" என்று நான் பேச ஆரம்பித்தேன்.

"அதோ அப்பாரு வாராரே!" என்றாள் அவள் குறுக்கிட்டு.

நண்பரும் விருந்தும்

ஆர். திருஞானசம்பந்தம்

யாரோ ஒரு மகான் பாடிச் சென்றார் :

யோசிக்கும் வேளையில் வயிறார
உண்பதும் உறங்குவதும் அன்றி
வேறொன்றறியேன் பராபரமே !

நான் கொஞ்சங்கூட யோசியாமலே அந்த முடிவுக்கு வந்து விட்டேன். ஆதலால் எனக்கும் மகானுக்கும் அதிக வித்தியாசம் இல்லை! பார்க்கப் போனால் உலகத்தில் என்ன இருக்கிறது? எத்தனையோ காட்சி கண் காட்சிகள் இருக்கின்றன! ஆனால் வாழ்விலே இன்ப ரசம் பொழிய வேண்டுமானால், உள்ளத்திலே உல்லாசம் பொங்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

எனக்குத் தெரிந்த வரையில், ஆனந்தகரமாக ருசியான உணவுகளை உட்கொள்ளுவதும், நண்பர்களை உட்கொள்ளச் செய்வதும்தான். "உண்டிக் கழகு விருந்தோடு உண்ணல்" என்று தெரியாமலா ஔவை சொல்லிப் போனாள்.

என்னைப்போன்ற சாப்பாட்டுப் பித்து நண்பர்களுடன் சேர்ந்து விட்டால், அந்த சுக மயமான பேச்சின் நடுவே, "இதுதான் சுவர்க்கம்" என்று நான் சொல்வது வழக்கம். ஆற்றங்கரையிலோ, மலைச்சாரலிலோ, இன்பப் பொழிலிலோ, குளிர் நிழலில் அருமையான உணவும் அதற்கேற்ற நண்பர்களும் இருந்து விட்டால், என்னத்தைச் சொல்லட்டும் போங்கள். உலகையே மறந்துவிட வேண்டியதுதான்.

எந்தப் பக்கம் போனாலும் என் நண்பர்கள் என்னைச் சும்மா விடுவதில்லை. என் போக்குத் தெரிந்திருப்பதால் வித விதமான உணவுகளைத் தயாரித்து விடுகிறார்கள். ஆகா ' அந்த நன்றியறித லுக்கு உள்ளாகும் பெண்மணிகள் இருக்கும் திக்கு நோக்கி என் தலை தாழ்ந்து வணங்குகிறேன். வாழ்க பெண் தெய்வங்காள்! சமீபத்தில் ஒரு அழகிய கிராமத்தில் ஆனந்தமாக வாழும் என் நண்பர் பாசு எனக்கு ஒரு விருந்து அளித்தார். இரண்டு விருந்து என்று சொல்ல வேண்டும். வீட்டிற்கு உள்ளே சங்கீத விருந்து. கூடத்திலே சாப்பாட்டு விருந்து. இரண்டு விருந்துகளும் சிந்தையைக் குளிரச் செய்தன.

நண்பர் தம்முடைய அருமைப் பத்தினிக்கு என்ன கட்டளை இட்டிருந்தாரோ? அருமைத் தங் கைக்கு என்ன உத்தரவு போட்டிருந்தாரோ? இருபத்திரண்டு விதப் பொறியல்களுடன் வெகு அற்புதமாக விருந்து அமைந்திருந்தது. இது ஏதோ பிறத்தியார் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள் ளவோ, அல்லது மற்ற நண்பர்களைத் தூண்டிவிட்டு இன்னும் அற்புத விருந்துக்கு ஏற்பாடு பண்ணவோ வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால், அதன் விளைவை நான் அனுபவிக்கத்தயார்.

இந்த விருந்து விமரிசையைக் கேட்ட என் நண்பர் லாலாஜீ சென்ற வாரம் அற்புதமான அரிய விருந்து ஒன்று ஏற்பாடு பண்ணி யிருந்தார். அவர் வீட்டில் உட்கார்ந்து கொண்டு அந்த அருமையான மணத்தைப் பகல் மூன்று மணி வரை நுகர்ந்து கொண்டே இருந்தேன். என்னால் பொறுக்க முடிய வில்லை. 'ஐயா, இப்படி என்னை என் வாதனை செய்ய வேண்டும்?' என்று கேட்டே விட்டேன். என்ன செய்தார் தெரியுமா? ஏன் கேட்கிறீர்கள்? சாப்பாட்டுப் பிரியர்கள் நண்பர் வீடு தேடிக் கொண்டு வந்து விடப்போகிறார்கள் என்று பயமாக இருக்கிறது. லாலாஜீயை மறந்தாலும் அவர் அளித்த விருந்தை மறக்கவே முடியாது.

சாப்பாட்டைப்பற்றி எவ்வளவு வேண்டுமானு லும் சொல்லலாம். எவ்வளவு வேண்டுமானுலும் எழுதலாம். என்னைச் சாப்பாட்டுராமன் என்று உலகம் சொன்னுலும் அதை நான் பொருட் படுத்தப் போவதில்லை. "வாழ்வின் இன்பம் சாப் பாட்டில் அடங்கியிருக்கிறது" என்று சீனப் பண்டிதர் சொன்னதை அப்படியே நான் ஆமோதிக்கிறேன்.

மனோ ரதம்

கே. ஸ்ரீ.

“சிந்தையை அடக்கி சும்மாயிருப்பது அரிதுமட்டுமல்ல, முடியவே முடியாது என்பதே என் முடிவு. தீவிரமான முடிவு,” என்று அவன் சொன்னதும், ஒரு நிமிஷம் அவனைக் கூர்ந்து கவனித்தேன்.

விரிந்த நெற்றி. அதன் மடிப்பு ஒவ்வொன்றிலும் சோகக் கால்வாய். அதன் ஓட்டத்தைத் தடுப்பது போல் கரடுமுரடான கன்னங்கள். சுருண்ட மயிர். அந்தத் துக்கத்தை மூட யத்தனிக்கும் பயனற்ற முயற்சிகள். அவன் கண்களில் தோன்றி மறையும் ஒளி கருமேகத்தைப் பிளந்து கொண்டுவரும் மின்னலை ஞாபகமுறுத்திற்று.

அவனைப் பார்த்தவண்ணமே வீற்றிருந்தேன். சில வினாடிகள் சென்றன. ஏன், சில நிமிஷங்களும் ஆயின. எங்கள் நடுவே காக்ஷியளிக்கும் மேஜை எழுந்து நகருவது போலிருந்தது. அதன் மீது இருக்கும் காப்பி டம்ளர்களினின்றும் எழும் ஆவி மேக மண்டலம் கட்டி குமுறிற்று. எலெக்ட்ரிக் வெளிச்சம் படுவதால், அவன் நிழல் விதியின் கோடுபோல் ஒரு பயங்கர ரூபத்தைச் சுவற்றில் சித்திரித்தது.

“ஏன், காப்பி ஆறிப்போய்விடும். சாப்பிடுங்கள்,” என்றேன்.

என் எச்சரிக்கையை அவன் கவனிக்கவில்லை. எதையோ அவன் கவனித்துக் கேட்டான். ஆம். ஒரு சங்கீத அலை குழைந்து எழுந்து எங்கள் காதில் ஒலித்தது. நான் புளகாங்கிதமடைந்தேன். என்னையே மறந்தேன். என்முன் உட்கார்ந்திருக்கும் ஆசாமியின்

நிலைமையைக் கவனித்தேன். அவன் மிரள மிரள விழித்தான். அவன் கண்கள் விரிந்தன.

பைத்தியம் பிடித்தவன் போல் எழுந்தான். "அவள்தான்! வேதவதிதான்," என்று வீரிட்டான். அந்தக் கீத அலைவரும் திசையை நோக்கி ஓடவாரம்பித்தான். நான் சட்டென்று எழுந்து அவன் கரங்களைப் பற்றினேன்.

"நண்பா! எங்கே ஓடுகிறாய்? உட்கார். இந்த கீதம் உன்னை ஏன் இப்படி பதற அடிக்கிறது?" என்று கேட்டேன்.

"பதறலா? என் உயிர் நிலையையே கலக்குகிறது. என்னைத் தடுக்காதே. அவள்தான். ஆம். அவள்தான்," என்று பரிதாபகரமாகக் கூறினான்.

"நீ எவ்வளவோ கீதங்கள் கேட்டிருப்பாய். இந்த ஒலி மட்டும் உன்னையேன் கவர்ந்தது?" என்றேன்.

"என்னை ஒன்றும் கேட்காதே. என் பொறுமையைச் சோதிக்காதே. அவளைக் காண நான் ஏங்கித் தவிக்கிறேன். நேரிலே பார்க்கலாமல்லவா? என்னைவிட்டு விடு. இதோ, நான் திரும்பிவிடுகிறேன்," என்று கூறி என் கைகளை உதறித் தள்ளிவிட்டு எழுந்திருந்தான்.

நல்ல வேளையாக அந்த ஒலியும் மடிந்தது. நான் சிரித்துவிட்டு, "இது கிராமபோன் பாட்டு. பாடினவள் ஒருத்தியும் இங்கே இல்லை. நீ நிதானமாக உட்கார்," என்றேன்.

அவன் திரும்பவும் நாற்காலியில் உட்கார்ந்தான். ஆழ்ந்தயோசனையிலிறங்கினான்.

"இதோ பார், காப்பி ஆறிவிடும். சாப்பிட்டுவிடுவோம்," என்றவுடன் அவன் ஒரு கப்பை எடுத்து மெல்ல மெல்ல அருந்தினான். நான் மற்றொரு கோப்பை காப்பியைக் குடித்துவிட்டு, என் நாற்கா

லியை அவன் அருகில் இழுத்துப் போட்டுக்கொண்டேன். அவனை ஏற இறங்கப் பார்த்தேன்.

அவன் உள்ளத்தில் பொங்கி எழும் உணர்ச்சி வெள்ளம் அவன் கண்களில் அலை மோதிற்று. ஹோட்டலில் நல்லகாலமாக வேறு ஒருவரும் இல்லை. கொஞ்ச தூரத்தில் ஹோட்டல் சொந்தக்காரன் அன்று வந்த சில்லறைகளை எண்ணுவதில் தன் முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்தான். நேரமாகி விட்டதால், ஹோட்டல் சிப்பந்திகளும் அதிகமாகக் கண்ணில் தென்படவில்லை. கடியாரத்தின் 'டிக் டிக்' சப்தம் மட்டும்தான். இந்த கலங்கின ஓய்வின் நடுவே துக்கம் உருவெடுத்ததுபோல் அவன் என் முன் வீற்றிருப்பது எனக்குப் பரிதாபமாக இருந்தது.

"நண்பா உன் மனதைத் துன்புறுத்தும் துக்கம் தான் என்ன? நான் உன்னை முன்பின் அறியாதவன். நாம் இருவரும் இப்பொழுதுதான், ஏன், சற்று நேரத்திற்கு முன்தான் சந்தித்தோம். ஆனால் உன்னிடம் என்னையறியாமலேயே ஒரு பாசம் இழுக்கிறது. என்னை நம்பு. என்னால் முடியுமானால் உன் சஞ்சலத்தைத் தீர்க்கிறேன்," என்று நான் மன்றாடினேன்.

அவன் பெருமூச்சு விட்டு விட்டு, "உன்னால் முடியாது. எவராலும் முடியாது. அது விதியின் விளையாட்டு. தீராத விளையாட்டு. ஆசையைக் கொழுந்துவிட்டு எரியச் செய்வதும், பூர்த்தியாகும் வேளையில் அதைப் பொசுக்குவதும், மனம் எழுப்பின கோட்டையை அடிப்படியாக அங்குலம் அங்குலமாக நொறுக்குவதும்தான் அதன் எக்களிப்பு, ஓயாத வேலை," என்றான்.

"ஏன், இதே விதி எத்தனை பேர்களுக்கு இச்சா பூர்த்தியையும் அளிக்கிறது."

"இந்தக் கணக்கு மிகவும் சிக்கலானது," என்றான்.

"இந்தச் சிக்கலில்தான் ஆத்மசோதனை வெற்றி பெறவேண்டும். வெற்றியில் பூரிப்பது, தோல்வியில் துவண்டுபோவது. இவ்விரண்டும் இச்சிக்கக் கூடியதல்ல. நடுநிலைமையே நேர்மையானது."

"பேசுவது சுலபம். நடத்தையில் கவுரவம் பெறுவதுதான் கஷ்டம். ஏன், முடியாத காரியம் என்று கூடத்தயங்காமல் கூறலாம்." இப்படிக் கூறினவுடன் அவன் முகம் திடீரென்று மாறிற்று. அந்த மாறுதல் என்னை அயரச் செய்தது.

அவன் பித்தம் பிடித்தவன்போல் என்னை நோக்கினான். "நண்பா, கேள்," என்று ஆரம்பித்தான். "இது பெரிய கதை. நடந்தது உண்மையா என்று நினைப்பாய். உண்மை, முற்றும் உண்மை. இருபது வருஷங்களுக்கு முன் நடந்தது. எனக்கு அப்பொழுது வயது இருபதுதான். சங்கீதம் என்றால் லாகிரி மாதிரி. வீணை வாசிப்பதில் நல்ல தேர்ச்சிப் பெற்றிருந்தேன். வீணையைக் கையில் எடுத்துக்கொண்டு விட்டேனானால் பசி, வீடு, யாவையும் மறந்துவிடுவேன். சப்தஜால அரண்மனையைக் கட்டிக்கொண்டேயிருப்பேன். அவைகளை எழுப்புவேன், நொறுக்குவேன், சிரிப்பேன். ஒரு கீத கோயில், நிரந்தரமான ஒரு ஒலி கோபுரத்தின் சோபையுடன், புதுப்புது ராக அரண் கட்டி, உலகத்தைப் பதற அடிக்க வேண்டும், மெய் மறக்கச் செய்யவேண்டும் என்ற அவா என் மனதில் குடிகொண்டது. இந்த சப்த மாளிகை, உலகம் கண்டிராத கேட்டிராத புது ராகவிடுதி, என் மனதில் வேரூன்றிற்று. ஆனால் அது புத்துயிர் பெற்று சோபிக்க, வாழ்வின் உயிர்நிலைபெற, ஒரு சிற்பியின் உதவி இன்றியமையாதது என்று உணர்ந்தேன். இந்த சிற்பியைத் தேடிச் சென்றது என் மனம். அல்லும் பகலும் படபடத்தது. காணாமல் போய்விடுமோ என்ற பயம். தோல்வி அடைந்து விடுவோமோ என்ற பீதி. இவை யாவும் என்னைச் சஞ்சலத்தில் சுழல வைத்தன. இரவு நெடுநேரம் நான் மான

ஸீகமாக எழுப்பின மோஹன கீதத்தின் உயிர்நிலே வேட்கையில் லயித்துக் கிடப்பேன். நாட்கள் சென் றன. மாதங்களும் ஆயின. நான் செய்த புண்ணியந் தான் என்று கூறவேண்டும். நான் வேண்டிய காரியம் கைகூடிற்று,'' என்றுகூறி அவன் சிரித்தான்.

அந்தப் புன்னகையில் தான் என்ன சோகம். விஸ்தரிக்க முடியாத சஞ்சலம்.

"அன்று பௌர்ணமி. சந்திரனின் வெள்ளி ஒளிபாளம் பாளமாக உலகின்மீது சரிந்துகொண் டிருந்தது. மெல்லிய காற்று மரக்கிளேகளில் குழ லோசை ஊதிக் கொண்டிருந்தது. இந்த விம்மும் கானத்தில் இயற்கை அன்னே உறங்கிக் கொண்டிருந் தாள். நான் ஜன்னல் வழியாக இந்த தெவிட்டா இனிமையைச் சுவைத்துக் கொண்டிருந்தேன். திடீ ரென்று எங்கிருந்தோ ஒரு கீதம் கிளம்பி என்னேப் பரவசப்படுத்திற்று. அது வரும் திசையை நோக்கி னேன். ஆம். வந்தவள் பெண்தான். நடமாடும் மலர் போல் அவள் என்னே அணுகினுள். அவள் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் வருவது, தென் றலில் அசையும் பூஞ்செடியையே எனக்கு ஞாபக மூட்டிற்று. இமை கொட்டாமல் அவளேக் கவனித் தேன். அவள் கானத்தில் சௌந்தரிய சுரங்கம் புதைந்து கிடப்பதை அவள் அறியாள். எப்படி அறிவாள்? அவள் நெருங்க நெருங்க நான் ஒரு மோஹன புயலில் புரண்டு கொண்டிருப்பதாக உணர்ந்தேன். கட்டுமீறிய எண்ணங்கள் என் மன தில் துளிர்த்தன. ஆவேசம் வந்தவன்போல் வெளியே வந்தேன். அவள்முன் ஓடினேன். பாதம் பூமியில் வேர் விட்டதுபோல் அவள் ஸ்தம்பித்து நின்ருள். என்னே விறைத்துப் பார்த்தாள். 'என்னேப் பார்க் காதே, பாடு' என்றேன். ஒரு நிமிஷம் தயக்கம். இந்த ஓய்வின்பின் ஒரு கான மழை. தெவிட்டாத சுவை. என் மனம் எங்கேயோ வெல்லாம் பறந்தது. பாய்ந்தது. உருண்டு ஓடிற்று. என் கண்முன் கலாஉயிர் தேவகன்னிகைபோல் ஜ்வலிப்ப

ரதமாக மாறிற்று. அவள் கலையை உலகம் போற்ற வேண்டும். இதற்கு வேண்டிய ஏற்பாடுகளில் முனைந்தேன். முதலில் வேதவதிக்கு என் திட்டத்தில் ஆசையில்லை. ஆனால், பறந்த உலகில் பரவிக்கிடக்கும் இன்பத்தைக் கண்டவுடன், பல்லாயிர மக்களின் ஆர்வ ஆரவாரம் அவள் காதுகளுக்கு எட்டியவுடன் அவள் மாறினாள். என் கலாராணியாக ஜ்வலித்தவள், உலக மோஹினியாய், நடன நக்ஷத்திரமாகச் சுடர் வீசினாள். நாளடைவில் அவளிடம் பல மாறுதல்கள் ஏற்பட்டன. கலா ரஸிகர்களின் கடிதங்கள் தினந்தோறும் மலைபோல் குவிந்தன. இந்தக் குவியலைப் பார்வையிடும் பொறுப்பும் என்மீது விழுந்தது. எல்லாம் வேதவதிக்குத் தானே! நான் தானே அவள் இன்று வகிக்கும் உன்னத நிலைமைக்கு, கற்பனைக்கும் எட்டாத பதவிக்கு, காரணம் என்று எண்ணி, என் மனதை தேற்றிக்கொண்டேன். வேதவதியும் என்னிடம் அபார நம்பிக்கை, அன்பு, ஆறுதல் கொண்டிருந்தாள்.

"என் மனோ ரதம் நிறைவேறிற்று; நான் இச்சித்த பாதையில், வெற்றி நாதத்துடன் கம்பீரமாக ஓடிற்று. உலகம் பிரமிக்க, மக்கள் குதூகலிக்க, என் உள்ளம்—என், எங்கள் ஆசை—நிறைவு பொங்கி வழிய, உருண்டு சென்றது. ஆனால்...... ஆனால்..........." என்றவன் கூறி முடிப்பதற்குள், பலபல என்று கண்ணீர் சிந்தினான்.

"அப்பா, மேலே சொல்; திடீரென்று நிறுத்தி விட்டாயே!" என்று கெஞ்சினேன்.

"என் மனோரதத்தின் அச்சாணி முறிந்தது!" என்று வெறுப்புடன் கூறினான்.

"ஏன்? எப்படி?" என்று நான் கேட்டேன்.

"கேள், முற்றும் கேட்டுவிடு. என் உள்ளத்தை நான் இதுவரை ஒருவரிடமும் திறந்து காண்பித்ததில்லை. முழுக்கக் கேட்டுவிட்டுப் போ!" என்றவன் சொல்லிவிட்டு நடுங்க ஆரம்பித்தான். தொண்டையைக் கனைத்துக்கொண்டு பேச ஆரம்பித்தான்.

தைக் கண்டு, நான் புளகாங்கித மடைந்தேன். வர்ணனைக் கெட்டாத உணர்ச்சிகளில் உழன்றேன். மெய் மறந்தேன். அவளை உள்ளே யழைத்துச் சென்றேன். அந்த கான தேவதையை என் வீணையினின்றும் உதிர்ந்த கீத மலர்களால் அலங்கரித்தேன். ஆஹா! அவள் கண்களைப் பார்க்கணுமே! ஆனந்த வெறியேறிய நயனங்கள்! அவள் என்னுடன் இருந்து எங்கள் இருவர் உள்ளத்தையும் ஒன்றுக்கிய சங்கீத கலைக்கு புத்துயிர் ஊட்ட சம்மதித்தாள். அவள் பாடுவாள். ஆடுவாள். புஷ்பக் கொத்துபோன்ற அவள் விரல்கள் சங்கீத சிற்பத்தைச் சதா தீட்டிக்கொண்டே யிருக்கும். படமெடுத்தாடும் பாம்புபோல் அவள் கரம் காற்றில் நெளியும். நான் வீணையில் மீட்டின நாதத்தின் பின்னணிபோல், அவள் மெல்லிய உடல் நெளிந்து நெளிந்து சுழலும். அவள் குரல் உணர்ச்சி பாவங்களை உதிர்க்கும். இந்த இசைப் பிரவாகம், கரை புரண்டு ஓடி சிதருமலிருக்க அணை போடுவது போல், சலங்கை ஒலி செப்பனிடும். விழியின் நெளிவுடன் தோள் விம்மும். அந்த விம்மலில், அந்த உணர்ச்சி பூரிப்பில், அந்த மகாமேரு களிப்பில் நான் வீணையை மறந்து, 'ஸபாஷ்' என்று அலறிவிடுவேன். அவள் நடன சிகரத்தைக் கைப்பற்றிய ஆனந்தத்தில், தன்னை மறந்து என் இன்பத்தில் சுழன்று விடுவாள். நாங்கள் இவ்வாறு எங்கள் நாட்களைத் தள்ளிக் கொண்டே போனோம்.

"நாட்கள் செல்லச் செல்ல, வேதவதியின்—நான் அவளுக்கிட்ட பெயர்—வேதவதியின் கலை ஐஸ்வரியம், குடத்திலிட்ட விளக்கைப்போல் புழுங்குவது எனக்குப் பிடிக்கவில்லை. நான் அனுபவித்தால் போதுமா? கலை, ஒரு தனி மனிதனின் செல்வமட்டுமல்ல. அது உலகத்தின் செல்வம். மனிதவர்க்கத்தின் செல்வம். காலதேவனின் பொக்கிஷம். வேதவதியின் கலையை, உலகம் அறியவேண்டும், புகழவேண்டும், பரவசமடைந்து மறக்காம லிருக்கவேண்டும்; இந்த எண்ணம் என் மனதில் தோன்றிற்று.

"ஒரு நாள் இரவு. ஆம். இந்நேரந்தானிருக்கும். நான் தனியாக என் அறையில் வீற்றிருக்கிறேன். வெளியே, பிசுபிசு என்ற தூற்றல். புத்தகம் படிக்கலாமென்று பார்த்தேன். என் புத்தி ஒரு இடத்தில் நிலைக்கவில்லை. வேலைக்காரன் உள்ளே வந்ததையும் கவனிக்கவில்லை. 'எஜமான், அவசர தந்தி வந்திருக்குங்க' என்று சொல்லி ஒரு கவரைக் கொடுத்தான். பரபரப்புடன் அதை உடைத்துப் பார்த்தேன். ஆம். அது வேதவதியிடமிருந்து. படித்தவுடன், அதை முதலில் என்னால் நம்ப முடியவில்லை. இருக்காது. இவ்வாறு நடந்திருக்காது என்று வாய்விட்டு அலறிவிட்டேன். கண்கள் நீர் வேலி கட்டின. சீ, என்ன பேதமை! கண்ணைத் துடைத்துக்கொண்டு தந்தியைமறுமுறைபடித்தேன்.

"நான் கேசவனுடன் ஸிலோனுக்குப் போகிறேன். இந்த தந்தி தங்களிடம் வரும் சமயத்தில் நான் கப்பலேறியிருப்பேன். என்னை மறந்துவிடுங்கள். வேதவதி.

"திருப்பித் திருப்பிப் படித்தேன். உண்மைதான். என்னை அடியோடு மறந்துவிட்டு, உதறித் தள்ளிவிட்டு, கலா விமர்சகன் கேசவனுடன் அவள் திக்விஜயம்செய்யக் கிளம்பிவிட்டாள். அவள் போகட்டும். எங்கு வேண்டுமானாலும் போகட்டும். தன் புகழை உலகமெங்கும் நிலைநாட்டட்டும். ஆனால் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகக்கூடாதா? நான் என்ன மாட்டேன் என்று மறுத்துவிடுவேனா? அப்படி நான் மறுத்தாலும் அவளுக்குத்தான் என் தடையை மீறிச்செல்ல சுதந்திரமில்லையா? என்ன கொடிய உலகம்? என் மனோரதம் இப்படியா, இவ்வளவு அலங்கோலமாகவா சிதையவேண்டும்? சிதறவேண்டும்? மனம் விண்டு நொந்து, நொறுங்கி நான் பித்தனைப்போல் அன்று முதல் அலைகிறேன்," என்று கூறி குழந்தை போல் கதறினான்.

அவனை நான் தழுவிக்கொண்டேன். துடிக்கும் கரங்களைப்பற்றி, என் மார்மீது பதிய வைத்துக்

கொண்டேன். "உன் மனோரதத்திற்கு முட்டுக் கட்டைபோட்டு, உன்னை பதற அடித்த அந்த கேசவனை நீ மன்னித்தாயா?" என்று கேட்டேன்.

"கேசவனா? அவன்மீது நான் என்றும் மனம் கசந்தவனல்ல. நான் உயிர் கொடுத்த கொடியே என்னை வஞ்சித்து வேறொரு மரத்தின்மீது படர்ந்தால், குற்றம் யாருடையது?" என்று கேட்டான்.

"பின் அந்த கேசவனை நீ வெறுக்கவில்லையே?" என்று கேட்டேன்.

"அவனை நான் கண்டு இருபது வருஷங்களாகின்றன. அவனை நான் ஒரு நாளும், ஒரு பொழுதும் வெறுக்கவில்லை. நான் யாரை எதற்காக வெறுக்க வேண்டும்? வேதவதியையும் நான் வெறுக்கவில்லை. அவள் கலையை நான் எப்படி மறப்பேன்? எவ்விதம் மறப்பேன்? எவ்வாறு வெறுப்பேன்?" என்றான்.

"நண்பா, வேதவதி உன்னை இந்த இருபது வருஷகாலமாக நினைத்து நினைத்து உருகி நிழலாக மாறி விட்டாள். அவள் உன்னை ஒரு பொழுதும் மறந்தவளல்ல. நீ போகக்கூடாது என்று மறுத்து விடுவாயோ என்று பயந்தே கேசவனுடன் வெளி நாட்டுக்குச் சென்றாள். இன்று உன்னைக் காணத் தவிக்கிறாள். பதை பதைக்கிறாள். அவளை நீ ஏற்பாயா? அவளை மன்னிப்பாயா? பழைய அன்புடன் வரவேற்பாயா?' என்று கேட்டேன்.

"எனக்கு அற்புதம் நடப்பதில் நம்பிக்கையில்லை,' என்றான்.

"நண்பா, நான்தான் கேசவன். உன்னை எப்படியாவது கண்டு தன்னிடம் கொண்டுவர அனுப்பப் பட்ட கேசவன் நான்தான்," என்றேன்.

என்னை இறுகத் தழுவிக்கொண்டான். அவன் சந்தோஷத்தை, எல்லையற்ற ஆனந்தத்தை விஸ்தரிக்க உலகில் வார்த்தைகளில்லை.

மாங்கல்யம்

ஸ்ரீமதி கோமதி சுப்ரமண்யம்

'குளவி புழுவைக் கொட்டிக் கொட்டித் தன் இனமாக்கும்' என்பது உண்மை. அப்படித் தான் ரகுவின் விஷயத்திலும் ஆயிற்று.

ரகு இரண்டாந்தரம் கலியாணம் செய்து கொள்வது என்றவரைக்கும் வந்துவிட்டான். இந்த முடிவை அவனுகச் செய்யவில்லை. அப்பா, அம்மா, தமக்கை, சுற்றத்தார் யாவரும் செய்த நிர்ப்பந்தம் சகிக்காமல் அவன் முடிவு செய்தான்.

ரகுவின் வைராக்கியம் தகர்ந்து கலியாணத்திற் குச் சம்மதித்தது அவனுக்கே வேடிக்கையாக இருக் கும். மறுநிமிஷம் உலகில் இரண்டாந்தாரம் கட்டிய வர்களை நினைத்து மனதைச் சாந்தப்படுத்திக் கொள் வான்.

மனம் தனக்குச் சாதகமாக எவ்வளவு சப்பைக் கட்டுகள் கட்டுகின்றது.

காலேஜ் லீவு விட்டதும் ஊருக்கு வந்து சேர்ந் தான். வந்ததும் பெண்ணையும் போய்ப் பார்த்தான். திருப்தியாக இருந்தாள். பெற்றோர்களுக்கும் மகா லக்ஷிமியையே மருமகளாகக் கொண்டுவந்து விட்ட தாக உற்சாகம். பாவம், ரகு தாமரை இலைத் தண் ணீர்போல் தவித்தான்.

தங்கம் காலமாகி வருஷம் ஒன்றுகூட முடிய வில்லை. மணமான இரண்டு வருஷங்களில் ரகுவை விட்டுப் பிரிந்துவிட்டாள். தங்கத்திற்குக் குழந்தை யொன்று இருந்திருந்தால் ஒரு ஆறுதல்; அதுவும் இல்லை. ரகுவிற்குத் தங்கத்திடம் உயிர். இருவரும்

நகமும் சதையும் போலவும், அன்றில் பறவைகளைப் போலவும் அதிக அந்நியோந்நியமாக இருந்தார்கள்.

ரகு தங்கமான பையன். சிவந்த மேனி. நல்ல அழகு வயதும் அதிகமாகவில்லை. பணம், பதவி, உத்தியோகம் எல்லாம் உண்டு. அப்படி இருக்கும் போது பெண்ணைப் பெற்ற யார்தான் அவன்பால் வலைபோட மாட்டார்கள்? அந்தப் பாக்கியம் சரஸ்வதியைப் பெற்றவருக்குக் கிடைத்தது. சரஸ்வதிக்கும் உள்ளூரச் சந்தோஷமே. இரண்டாந்தாரம் வாழ்க்கைப் படப் போகிறோமே என்ற திகில் அவள் இதயத்தில் உண்டாகவில்லை. உள்ளூர 'கொடுத்து வைத்தோம்' என்ற திருப்திதான்.

"ரகுவிற்கு சரஸ்வதியை......" என்று அழைப்பிதழ்கூட அடித்து முடிந்தது.

2

நாராயணன் ரகுவைச் சாப்பிட அழைத்திருந்தான். பால்ய நண்பன் கூப்பிடுகிறானே என்று தட்டமுடியாமல் ரகுவும் போனான்.

அப்போதுதான் திதி நடந்து கொண்டிருந்தது. அன்று திதி என்று தெரிந்திருந்தால் ரகு போயிருக்கவே மாட்டான். போனபின் திரும்புவது சரியல்ல என நினைத்து வீட்டுக்குள் ஏறினான்.

"ரகு, வாடாப்பா, அப்படி உட்கார். இந்தா உன்னைத்தானே, ஒரு டம்ளர் காப்பி கொண்டுவந்து கொடு," என்று சொல்லிக்கொண்டே நாராயணன் கையில் தர்ப்பைப் பவித்திரத்தை மாட்டிக்கொண்டான். காப்பி வந்து சேர்ந்தது. அதை வேண்டா வெறுப்பாக ரகு குடித்தான்.

வாத்தியார் திவச மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். யந்திரம் போல எவ்வித உணர்ச்சியுமின்றி நண்பன் அம் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு வருவதை ரகு கவனித்தான். "ரகு வெற்றிலை போடேன். இந்தா, மீனு, வெற்றிலைப்

பாக்கு கொண்டுவா. ரகுவிற்கு வெற்றிலைப் பாக்கு என்றால் பிரியம்," என்று மந்திரங்களோடு சொன்னான் நாராயணன்.

வெள்ளித் தட்டில் பாக்கு வெற்றிலை வாசனைச் சுண்ணம் வந்தன. வெற்றிலை போட்டுக்கொண்டு ரகு உட்கார்ந்திருந்தான். அவன் மனம் "தங்கத்திற்கு நீயும் திவசம் கொடுக்க வேண்டும்" என்றது. ஆனால் தன் நண்பனைப்போல் எவ்வித கவலையுமின்றி தன்னால் கொடுக்க முடியுமா, என்று மனக்குரல் கேட்டது.

தன் முதல் மனைவிக்கு இப்போது நண்பன் கொடுக்கவில்லையா? ஏன்! பழகப் பழக அப்படித் தான்! என்ற சிந்தனையில் ஆழ்ந்தான்.

திடீரென, "ஆமாம், உன் கலியாணப் பத்திரிகை வந்தது. ஏண்டா ரகு, பெண் எப்படி? முதல்தாரம் தங்கம் மாதிரி இருப்பாளா?" என்றான் நாராயணன். இது ரகுவின் காதில் விழவில்லை.

வாத்தியார் எள்ளுந் தண்ணியும் தெளித்து, காய்கறிகளை முடிந்து கொண்டிருந்தார்.

சொப்பன லோகத்தில் ஆழ்ந்திருந்த ரகு இவ்வுலகிற்கு வந்தான். அப்போது வாத்தியார் "கலியாணம் அடுத்த வெள்ளிக்கிழமைதானே. நான் வந்துவிடுகிறேன். வரட்டுமா?" என்று ஒரு கூழைக் கும்பிடுபோட்டுவிட்டு நடந்தார்.

அந்த மனுஷனுக்கு சாவும் கலியாணமும் ஒன்றுதானா?

"சமையல் ஆகிவிட்டது," என்றாள் நாராயணன் மனைவி.

"நீ சாப்பிட்டாச்சோ?" என்று நாராயணன் கேலியாகச் சொன்னான்.

"போதுமே விளையாட்டு. நல்லநாளும் கிழமையும் நான் சாப்பிடுவேனா?" என்று சிரித்துக் கொண்டு உள்ளே போனாள்.

ரகு மனதிற்குள், "நல்லநாள். ஆம் இவளுக்கு நல்லநாள்தானே! ஆகா! நல்ல மனப்பான்மை; இரண்டாந்தாரக்காரி மனப்பான்மை!" என்று அருவருப்பு கொண்டான்.

பால்போல் விளக்கப்பட்ட இரு பித்தளைச் செம்புகளில் தண்ணீர் கொண்டுவந்து வைக்கப் பட்டது.

"சாப்பிடுவோமா ரகு? ஆமா, மீனு, சேமியாப் பாயஸந்தானே. வடை கூட உண்டா?" என்று மனைவியைப் பார்த்துக் கேட்டான்.

அவளும் சிரித்தபடியே, "ஆமாம் சீக்கிரம் வாருங்கள். இலை போட்டாய்விட்டது" என்றாள்.

ரகு, "இவனென்ன மிருகமா? மனம் மழுங்கி விட்டதா? கொஞ்சங்கூட உணர்ச்சி இல்லையே! வடை, பாயஸம், வேடிக்கை, ஹாஸ்யம், சரஸ சல்லாபம் எல்லாம் இன்றுதானா?" என்று நினைத் துக்கொண்டான். நண்பனைப் பார்த்தான்.

"என், எழுந்திரு, இலை போட்டாயிற்று," என் றான் நாராயணன்.

"யாராவது வரவேண்டுமா?" என்று ரகு கேட்டான்.

"இது ரெண்டாந் திவசந்தானே. யாரையும் கூப்பிடவில்லை. நீ மட்டும்தான்," என்று அலக்ஷிய மாகச் சொன்னான்.

இருவரும் சாப்பிடப் போனார்கள். சாப்பிடும் போது பெண்ணின் அழகு, நகை நட்டு விஷயம் இவைகளைப்பற்றி நாராயணன் தொணதொணத்துக் கேட்டான். நண்பனுக்கு அரைகுறையாகப் பதில் சொன்னான் ரகு. ஆனால் நாராயணன் மனைவி, ரகு சொல்ல விட்டுவிட்ட விஷயங்களின் பூரா விபரமும் சொல்லி முடித்தாள்.

நாராயணன் மனம் என்ன கரும்பலகையா - அழித்து அழித்து எழுத? முதல் மனைவி திவசத்

தன்று, அவன் மனதில் துளிகூட துக்கமோ, அவளைப்பற்றிய சிந்தனைக் குறியோ இல்லாமல் நிம்மதியாகச் சாப்பிடுவதைக்கண்டு ரகு மனம் புழுங்கினன். ரகுவின் இலையில் கரண்டி கரண்டியாக நெய்யும் பாயஸமுமாக ஊற்றச் சொல்லச் சொல்ல, மீனு இலை நிறைய ஊற்றிவிட்டாள்.

ரகு தர்ம சங்கடத்தில் உட்கார்ந்திருந்தான். அப்போது, "புது மாப்பிள்ளை சாப்பிடடா," என்முன் நண்பன். அந்தச் சொல் வேடிக்கையாகப் பிரயோகம் செய்யப்பட்டது ரகுவிற்கு வேல்போல் பாய்ந்தது. அவன் புது மாப்பிள்ளைதானு?

ஒருமட்டும் நெருப்பில் குளித்து எழுந்தவன் போல சாப்பாடு முடிந்து விடைபெற்றுச் சென்முன் ரகு.

3

மேளதாளம். "மணமேடைக்கு மாப்பிள்ளை வரட்டும்" என்ற குரல்கள் எழுந்தன.

ரகு, புதிய கோட்—புதிய மாமனர் தைத்திருந்த கோட்டை—அணிந்துகொண்டிருந்தான். பெட்டியில் புதுசும் பழசுமாக வேஷ்டிகள் சட்டைகள் கிடந்தன. மூன்று வருஷங்களுக்கு முன் தங்கத்தோடு வந்த ஸில்க் சட்டை பட்டுக் கரை வேஷ்டி இன்னும் சில அவன்பார்வையில் இருந்தன. எல்லாவற்றையும் அடுக்கினன். அடியில் பத்துப் பதினைந்து கடிதங்கள், தங்கம் எழுதிய அவள் நினைவுக் குவியல்கள் கிடந்தன. எல்லாம் இருக்க அவள் மட்டும் இல்லை.

கீழே இருந்து "மாப்பிள்ளை வரட்டும்" என்ற குரல்களும், மேளதாள முழக்கமும் கேட்டன. ரகு ஒரு கடிதத்தை எடுத்தான். "எனது ஆருயிர் அத்தானுக்கு" என்ற வரி கண்களை உருத்தியது......பேய் பிடித்தவன்போல் அவ்வளவு கடிதங்களையும் ஒன்முக அடுக்கிக் கிழிக்க முயன்முன்: முடியவில்லை.

ஒவ்வொன்ருகக் கிழிக்க முயன்ருன்; இரண்டொன்றைக் கிழித்தும் விட்டான்.

மாப்பிள்ளைத் தோழன் வந்து, "சீக்கிரம், முகூர்த்த நேரம் நெருங்கிவிட்டது. பெண் மணமேடைக்கு வந்தாச்சு," என்ருன். மூன்று வருஷங்களுக்குமுன் அதே வார்த்தைகள் இன்பத் துளிகளாக இருந்த காதுக்கு இன்று நாராஸமேற்றினது போலிருந்தன.

அப்படியே பெட்டியைப் போட்டுவிட்டு எழுந்தான். சுவரில் தொங்கிய ரோஜா மாலையை எடுத்து மாப்பிள்ளைத் தோழன் அணிவித்தான். ரோஜா மாலை அவன் உடலைக் குத்துவதைப்போல் இருந்தது. மெதுவாக மாடியிலிருந்து மணமாலையுடன் இறங்கினுன்.

முகத்தில் துக்கம் பொங்கிக்கொண்டிருந்தது. கலக்கமுற்ற கண்களை அடிக்கடி கைக்குட்டையால் துடைத்தான். மூன்று வருஷங்களுக்கு முன் மணமேடையில், திருட்டுத்தனமாகத் தங்கத்தைப் பார்த்த போது அவன் உள்ளம் இன்ப வாரிதியில் இருந்தது. இப்போது துக்க சாகரம் பொங்கியது. சரஸ்வதியை—மணப் பெண்ணை, தலை நிமிர்ந்து பார்க்க மனங் கூசிற்று.

மணப் பந்தலில் எல்லோரும் தாலியும் பட்டாடையும் வைத்த புஷ்பத் தட்டை ஆசீர்வாதம் செய்தார்கள். வாத்தியார் "நேரம் ஆச்சு, மாங்கல்யம் வரட்டும்," என்ருர்.

நாராயணன் வீட்டில் வாத்தியார் பேசிய திவசக் குரல் ஏனோ ரகுவின் நினைவிற்கு வந்தது.

வலப் பக்கம் அழகே உருவெடுத்த சரஸ்வதி உட்கார்ந்திருந்தாள். புது மணப் பெண்ணின் கோலம் அவளுக்கு சோபையாக இருந்தது...உச்சி வகிடும், ஜோடனையும், கூந்தலில் கோத்திருந்த அடுக்கு மல்லிகையும் யார் உள்ளத்தையும் கொள்ளை

OFFICE OF THE REGISTRAR OF ...
4 - MAY 1944
MADRAS

இடிந்த வீடு

ஸ்ரீமதி சரசுவதி பாசு

கோவிந்தன் எதோ ஒரு ஆபிஸில் குமாஸ்தாவேலை பார்ப்பவன். அவனுக்கு மாதச் சம்பளம் இருபது ரூபாய். அவன் வருஷக்கணக்காக அந்த இருபது ரூபாய் சம்பளத்திலேயே இருந்து வந்தான். அவனுடைய ஆபீஸ்தலைவருக்கு அவன் மீது இரக்கம் உண்டாக வில்லை. இந்த விஷயத்தில் கடவுளும் அவனைக் கண்திறந்து பார்க்க வில்லை.

சம்பளத்திற்கேற்றவாறுதானே அவன் நிலைமையும் இருக்கும். நகரத்தின் எல்லையில் கூவ நதியோரத்தில் அவன் வீடு. அது பார்ப்பதற்கே விசித்திரமான வீடாகத் தோன்றும். மண்ணாலெடுத்த சுவர். மூங்கில் வலிச்சல்களைப் பரப்பி ஓடு மூடப்பட்ட கூரை. மூங்கில் தடுக்கால் செய்யப்பட்டது வீட்டின் கதவு. வீட்டுக்குமுன் இரண்டு வாழை மரங்கள். இந்த மண் வீட்டைத்தான் கோவிந்தனுடைய பெற்றோர் அவர்கள் ஞாபகார்த்தமாகவும் பிதிரார்ச்சிதமாகவும் வைத்து விட்டுப் போனார்கள்.

இப்பொழுது அவன் குடும்ப பாரத்திலிருந்து அவன் பெற்றோர் விலகிக்கொண்டாய் விட்டது. அவர்கள் இறந்து நான்கைந்து வருஷங்களாகின்றன. அவர்களுக்குப் பதிலாக கோவிந்தன் மனைவியும் நான்கு குழந்தைகளும் இருந்தார்கள். அவனுக்கென்னமோ வயது இருபத்தாறுதான். இருந்தாலும் கடவுள் அவன் மீது கருணை கூர்ந்து நான்கு குழந்தைகளைக் கொடுத்தார். எத்தனையோ பணக்காரர்களெல்லாம் மகப் பேறில்லாமல் கடுந்தவம் செய்கிறார்களே, அவர்களுக்குக் கடவுள் அந்தக் கருணையைக் காட்டக் கூடாதா? ஏழையாகிய

கொள்ளும். தளிர்க் கரங்களும், மலர் முகமும், காதல் நிறைந்த கண்களும் ரகுவிற்காகக் காத்து நின்றன.

ரகு வேண்டா வெறுப்பாகப் பார்த்தான். பெற்றோர்கள் ஆசிர்வதித்து தங்கள் தங்கள் குழந்தைகளை மணமாலை மாற்றிக் கொடுப்பதாக வாக்குத் தத்தங்கள் செய்து முடித்தார்கள். வாத்தியார்—நாராயணன் முதல் மனைவிக்குத் திவசம் கொடுத்த அவரே—சந்தோஷமாக மந்திரங்களைச் சொல்லிவந்தார். புகை எங்கும் பரவியது. கலங்கி நின்ற ரகுவின் கண்கள் பொலபொலவென கண்ணீர்த் துளிகளை உகுத்தன.

தாலியை ரகுவின் அக்கா வாங்கினாள். ரகு அதைத் தொட்டு சரஸ்வதியின் கழுத்தில் முடிய வேண்டும். தொட்டான். அவ்வளவுதான். ஒரேயடியாக அழுதுவிட்டான். அவனுக்குத் தங்கம் இறந்தபோது, 'வாடிப்போன கொடியிலிருந்து புஷ்பத்தைத் திருகுவதுபோல்' தாலியைக் கழற்றி அவன் கையில் கொடுத்த ஞாபகம் வந்தது. அப்பொழுது அவன் செய்த சபதம்—'இந்தத் தாலியைத் தங்கத்தைத் தவிர வேறு ஒருவருக்கு அணிவிப்பதில்லை' யென்று செய்த சபதம்—நினைவிற்கு வந்தது. கட்ட இருந்த மாங்கல்யம் கையிலிருந்து நழுவி சரஸ்வதி மடியில் விழுந்தது. மணமேடையிலிருந்து திடீரென எழுந்து மாடிக்கு ஓடினான் ரகு.

வழி மறித்தும் பயன் இல்லை. மேல் மாடியிலிருந்து இறங்கவே மறுத்துவிட்டான். முகூர்த்த நாழிகை தவறியது.

ரகு மாடியிலிருந்தபடியே, "தங்கம் தங்கமென" உருகினான். "மாங்கல்யம் அவளுடையது; பிறருக்கு இல்லை," என்று கோரமாகக் கத்தினான்.

அரை மணி நேரத்தில் தங்கத்திற்குத் தாலி கட்டியவன் அவளைத் தேடிப் போய்விட்டான்.

டாக்டர் "மாரடைப்பு" என்று சமாதானம் சொன்னார்.

குக் காரணம் தன் மனைவி குடும்பத்தைச் சிக்கன மாக நடத்தாமை யென்று நினைத்தான். குழந்தை களால் செலவு அதிகப்படு மென்பது அவனுக்குத் தெரியும். இந்த நான்கு குழந்தைகளும் இல்லாதிருந் தால் எவ்வளவு நிம்மதியாக வாழ்க்கையை நடத்த லாம் என்று சில வேளைகளில் நினைப்பான். ஆனல் அவன் மனைவிக்கு இந்த எண்ணம் உண்டாவதில்லை. குழந்தைகள் அவளுக்குத் தெய்வம். ‘எவ்வளவோ பேர்களுக்குந்தான் குழந்தை குட்டிகள் பிறக்கின் றன. எல்லோரும் இப்படியா குழந்தைகளை வெறுத் துத்தள்ளுகிருர்கள்? இந்தக் குழந்தைகளுக்காக எவ்வளவு பேர்கள் கோயில் குளத்தைத் தரிசித்துத் தவங்கிடக்கிருர்கள்’ என்றெல்லாம் எண்ணித் தன் கணவனுடைய அறியாமைக்காக வருந்துவாள்.

கோவிந்தன் தன் குழந்தைகளை வெறுத்துப் பேசும்பொழுது அவன் மனைவிக்கு அதைக் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. அவளுக்கு ஆத்திரம் பொங்கும். “ஆமாம், உங்களுக்குத் திறமை யில்லா விட்டாலும் குழந்தைகளை வெறுக்கிறீர்கள். வேலைக் குப்போய் ஆறு வருஷமாயிற்றே, இன்னும் அதே சம்பளத்திலேயே இருக்கிறீர்களே! உங்களுக்குச் சாமர்த்திய மிருந்தால் கொஞ்சமாவது சம்பளம் உயர்ந்திருக்காதா?” என்று கேட்பாள்.

ஒரு நாள் இப்படி மனைவி பேசியதைக் கேட்ட கோவிந்தனுக்கு ரோஷம் பொங்கி யெழுந்து கொண்டு வந்தது. சட்டையுடனிருந்தவன் பேசா மல் திடீரென ஒரு குட்டையை எடுத்துமேலே போட்டுக் கொண்டு வெளியே போய்விட்டான். திறமையுள்ள அவளே தன் குழந்தைகளை வைத்துக் கொண்டு வாழட்டும் என்ற எண்ணத்தைத் தவிர வேறு யோசனை ஒன்றும் செய்தவனல்ல. ஆனல் நடை மட்டும் நிற்கவில்லை; நடந்துகொண்டே யிருந் தான்.

அவன் எத்தனையோ ஊர்கள் சுற்றியும் எங்கும் அதிகவருமபடி கிடைக்கக் கூடிய வேலை யொன்றும்

கோவிந்தனுக்குத்தான புத்திர சந்தானத்தைக் கொடுக்க வேண்டும்? இது ஒரு திரு விளையாடல். இதன் கருத்து மாத்திரம் விளங்குகிறதில்லை.

அவன் மனைவி அழகு வாய்ந்தவள். அவளைக் காதலித்த பின்தான் அவன் அவளை மணந்து கொண்டான். அவர்கள் வாழ்க்கை ஆரம்பத்தில் மாசு மறுவற்று தானிருந்தது. அவனுக்கு மனைவியிடம் அளவு கடந்த ப்ரேமை. அவளும் கணவன் மனங் கோணாமல் நடந்து வந்தாள். அவர்களிடையே உண்டாயிருந்த சந்தோஷத்திற்கு எல்லை இல்லாமலேயிருந்தது. காலச் சக்கிரம் சுழலச் சுழல குழந்தைகள் ஒவ்வொன்ருகத் தோன்றின. குழந்தைகள் அதிகமாகவும் தரித்திரதிசையில் அவன் சிக்குண்டு உழலவும் நாளடைவில் அவர்களிருவருக்கிடையே சிறிது மனக்கசப்பு உண்டாயிற்று. மனக்கசப்புண்டானதற்குக் காரணம் இருவரில் ஒவ்வொருவரும் படும் கஷ்டங்களை மற்றவர் அறியாமையே.

நாள் பூராவும் உழைத்துவிட்டு, வீட்டிலாவது கொஞ்ச நேரம் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருக்கலாம் என்று கருதி இரவானதும் கோவிந்தன் வீடு திரும்புவான். அவன் மனைவியோ பொழுதெல்லாம் குழந்தைகளிடம் போராடி விட்டு, பகல் பூராவும் சரியான ஆகாரமின்றி பட்டினியாயு மிருப்பதால் பொழுது சாய்ந்த பிறகு ஓய்ந்து பலஹீனமுற்று உட்கார்ந்திருப்பாள். அவள் அப்படி உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் கோவிந்தனுக்குக் கோபம் வரும். தான்தான் நாள் பூராவும் உழைப்பதாகவும், தன் மனைவி வீட்டிலேயே சுகமாக உட்கார்ந்து கொண்டு காலத்தைக் கழிப்பதாகவும் அவன் நினைப்பான். அவன் தன் கோபத்தில் மனைவியை "மூதேவி, சனி," என்றெல்லாம் வைய வாரம்பிப்பான்.

யுத்தத்தின் காரணமாகச் சரக்குகளின் விலைகள் ஏறிவிட்டன. அதனாலேயே அவனுடைய வரும்படி அவனுடைய குடும்பச் செலவிற்குப் போதுவதில்லை. இது அவன் உணர்ச்சிக் கெட்டவில்லை. பஞ்சத்திற்

தன் வீடு இருந்த இடத்தை யடைந்தபொழுது அவன் திகைத்துப் போனான். அவனுடைய பிதிரார்ச்சிதமான அந்த மண் வீடு குழுங்கி விழுந்து கிடந்தது. அக்கம் பக்கத்தில் தகவல் விசாரிக்க வேண்டியதாயிற்று.

அவன் ஊரை விட்டுப் போன பிறகு அவன் மனைவி சொல்ல முடியாத மனக் கஷ்டமடைந்து பல விதத் துன்பங்களுக்காளாகி இறந்து விட்டாள். அவளைத் தூக்கிப்போய் எரிப்பதற்குக்கூட வழியில்லாமல் போய் கடைசியாக அவ்வூர் வெட்டியான் உடலைப் புதைத்தான். அவளுடைய குழந்தைகளுக்கு ஆதரவளிக்க ஒருவருமில்லாததால் சிறிய குழந்தைகளிரண்டும் தாயின் பின் இறந்து போயின. பெரிய குழந்தைகள் இரண்டும் பிச்சை யெடுத்து அதே வீட்டில் இருந்து வந்தன. பிறகு ஒரு வாரம் விடாமல் மழை பெய்தது. அப்பொழுது திடீரென்று ஒரு நாள் அந்த மண் வீடு விழுந்து விட்டது. அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் இடிந்து விழுந்த வீட்டுக்குள் பார்த்தபொழுது ஒருவரையும் காணவில்லை.

குழந்தைகள் வீடு விழுந்த அன்றே கால் நடையாக ஓடி விட்டன. அவைகள் சென்னைத் தெருக்களில் பிச்சை யெடுத்து, பூட்டப் பட்டிருக்கும் வீடுகளின் முற்றங்களிலும் மரத்தடிகளிலும் இரவு நேரங்களில் ஒதுங்குவார்கள்.

"குழந்தைகள் இரண்டுமாவது எங்கே இருக்கின்றன என்று உங்களுக்குத் தெரியாதா?" என்று கோவிந்தன் கேட்டான்.

"வீடு இடிந்து விழுந்த பிறகு அதற்கடியில் மாட்டிக் கொண்டார்களோவென்று தேடிப்பார்த்தோம். அவர்களைக் காணவில்லை. எங்கேயோ உயிருடன்தான் இருப்பார்கள்," என்றார் ஒருவர்.

"உயிருடனாவது இருக்கிறார்களா?" என்று கோவிந்தன் கேட்டுக்கொண்டிருந்த பொழுது தந்தி

கிடைக்கவில்லை. சில சமயங்களில் அவனுக்கு மனைவி குழந்தைகளின் நினைவு வரும். அவர்கள் பட்டினியால் வருந்தும் கோரக்காட்சியைக் கற்பனை செய்து கொள்வான். பாவம்! அவர்கள் கஷ்டப் படுகிறார்களே என்று தானும் வருந்துவான். உடனே மறு நிமிஷம், "சீ, பேதை மனமே, உனக்குமட்டும் என்ன அவ்வளவு பற்று? அவளுக்கு எவ்வளவு அகங்காரம்! தாலி கட்டிய கணவனைத் திறமையற்றவன் என்று சொன்னாளே, கர்வி! நன்றாகக் கஷ்டப்படட்டும். அப்பொழுதுதான் என்னுடைய பிரிவாற்றாமையை உண்மையில் அறிவாள்," என்று தன்னைத்தானே சமாதானப் படுத்திக்கொள்வான்.

அன்று அவன் ஒரு கிராமத்தில் தங்கினான். யுத்தப் படைக்கு ஆள் சேர்ப்பதற்காக அவ்வூருக்கு ரிக்ரூட்டிங் ஆபீஸர் ஒருவர் வந்திருந்தார். கோவிந்தன் அவரிடம் சென்று தன்னையும் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டினான். அவரும் அப்படியே செய்தார்.

கோவிந்தன் வீட்டை விட்டு இராணுவத்தில் சேர்ந்து நான்கு வருஷங்களாயின. அவனுக்குப் பதவிமேல் பதவி கிடைத்துக் கொண்டு வந்தது. இப்பொழுது அவன் வருமானம் இருநூறு ரூபாய். அவன் தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு வீட்டுக்குப் போகாமலிருந்தான். நாளடைவில் அவன் சேர்த்து வைத்த பணத்தொகை பெருகப் பெருக அவன் மனம் இளகியது. தன் மனைவி குழந்தைகளைப் போய்ப் பார்க்கவேண்டுமென்கிற எண்ணமும் உண்டாயிற்று. அவன் போர் முனைக்குச் செல்ல இன்னும் ஒரு மாத காலமிருந்தது. அவன் பதினைந்து நாள் லீவு வாங்கிக்கொண்டு ஊருக்குக் கிளம்பினான். அவன் தன் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் வேண்டிய துணிமணிகள், தின்பண்டம், விளையாட்டுச் சாமான்கள் முதலிய வற்றை வழியில் வாங்கிக் கொண்டான்.

சேவகன் ஒருவன் தந்தி ஒன்றைக் கொண்டு வந்து கோவிந்தனிடம் கொடுத்தான்.

சேனை போர் முனைக்கு இரண்டு நாளில் போக வேண்டுமென்று திடீரென்று உத்தரவு பிறந்ததால் கோவிந்தனை உடனே புறப்பட்டு வரும்படி தந்தி வந்தது.

கோவிந்தன் அன்றே ரெயிலில் புறப்பட்டான். போர் முனைக்குச் சென்றான். எதிரியை எதிர்த்துப் போர் புரியும்போதுகூட அவன் மனக்கண் முன் அவன் குழந்தைகளும் அந்த இடிந்த வீடுந்தான் சதா காட்சியளித்தன. அவனே குண்டுகளை வீசி எத்தனையோ பெரிய பெரிய கட்டிடங்களை யெல்லாம் தகர்த்தான்; இருந்தாலும் அவனுடைய இடிந்த வீடு நினைவில் தோன்றும் பொழுது மட்டும் அவன் மனம் ஆறுவதில்லை.

சிந்தாமணி

இனியன்

சிந்தாமணி விஸ்தீரமான ஒரு நாடு. இயற்கையிலேயே வளம் பொருந்திய நாடு சர்க்கார் சிரத்தையினாலும் பொது ஜனங்களின் ஊக்கத்தினாலும் நாளுக்கு நாள் விருத்தியடைந்து வந்தது. நாட்டிலுள்ள பல இலாக்காக்களும் நல்ல ஸ்திதியில் நடந்து வந்தன. வித்தியா இலாக்கா அடைந்திருந்த ஏற்றமே மற்ற இலாக்காக்கள் சீரடைந்ததற்குக் காரணம். சிந்தாமணியில் கட்டாயக் கல்வி, ஆரம்பக் கல்வி யளவில் நிற்கவில்லை. உயர்தரக் கல்வி பல குடும்பங்களுக்குக் கட்டாயக் கல்வி யாயிற்று. உயர்தரக் கல்வியில் தேர்ந்தவரில் பலர் பல்கலைக் கழகங்களில் பயின்றனர். ஆகவே நாட்டில் கற்றவர் பலர். கல்விக் கருகர் ஆண் மக்களேயன்றி பெண் மக்களும் என்னும் உண்மை முதலில் நிர்ப்பந்தமாகத் தோன்றியபோதிலும் நாளடைவில் ஜனங்கள் அதனால் விளையும் நன்மையை உணர்ந்தனர்.

சிக்கனத்திற்காகவும் ஆண் பெண்களுக்கிடையே ஒருவித போட்டி உண்டாகி அதனால் அவர்கள் விருத்தியடையவும் மற்றும் பல சௌகரியங்களுக்காகவும் சிந்தாமணியில் ஆண் மக்களுக்கும் பெண் மக்களுக்கும் பொதுவான பாடசாலைகளையே ஸ்தாபித்து நடத்தினார்கள். ஆரம்பப் பாடசாலைகளிலிருந்து பல்கலைக் கழகங்கள் வரையிலும் இக் கலப்புக் கல்விதான். இது ஆண் பெண் இரு பாலரும் பல்வகைத் திறங்களில் ஒத்துழைக்கவும் நாடு முன்னேற்றமடையவும் ஏதுவாயிற்று.

கல்விக் கழகங்களில் ஏற்பட்ட இக் கலப்பு காரியாலயங்களிலும் தொடர்ந்தது. காரியாலயங்

களில் சிப்பந்திகளனைவரும் ஆண்களும் பெண்களும். உவர்த்திமை, இலேககம், மருத்துவம், வியாபாரம், நியாய வழக்கு முதலிய பல துறைகளிலும் ஆண்பாலரும் பெண்பாலரும் காரியங்களைக் கவனித்து வருவது சிந்தாமணியில் சகஜம்.

தன் நாட்டின் பெயரையே தன் பெயராகக் கொண்டவள் சிந்தாமணி யென்னும் மடந்தை. நல்ல குடும்பத்தில் பிறந்த இம்மாது குலசேகரரின் ஏக புத்திரி. பேரும் புகழும் பெற்ற அவர் பிரபல வியாபாரக் கம்பெனி யொன்றில் மேலதிகாரி. கம்பெனியின் முன்னேற்றத்திற்குக் காரணமானவர்.

குலசேகாரும் தன் புத்திரிக்குக் காலத்தில் வித்தியாரம்பம் செய்தார். வகுப்புகளில் முதல் ஸ்தானமும் முதற் பரிசும் சிந்தாமணிக்குச் சொந்தம். பிரவேசப் பரீக்ஷையில் நாட்டில் முதலாகத் தேறினாள்.

சிறு வயதிலிருந்தே சிந்தாமணி ஒரு குணவதி. அவள் பீ. ஏ. பரீக்ஷைக்கு எழுதியபின் அவள் தந்தை சில நாள் காயலாகவிருந்து விண்ணுலகேகினார். இத்துயரிலிருந்து மீளாமலே மனோன்மணியான அவள் தாயும் தன் பதியைத் தேடிப் போனார். இச் சம்பவங்களால் நேர்ந்த துயரினின்றும் தன்னைத்தானே தேற்றிக்கொண்டாள். சுற்றத்தார் காரியங்களைக் கவனித்துவிட்டுப் போயினர். இரண்டொருவர் சிந்தாமணி இனித் தனியாயிருப்பது சரியல்ல; தகுந்த வரனைத் தேடி சீக்கிரத்தில் மணம் முடிக்க வேண்டும் என்றார்கள். சிந்தாமணி தன் விவாகத்தைப்பற்றி இதுவரை சிந்தித்தவளல்ல. திடும்பிரவேசத்தில் அவளுக்கு யோசனையொன்றும் புரியவில்லை. கலியாணமென்றால் ஆய்ந்தோய்ந்து பாராது பிரவேசிக்கும் காரியமல்ல—அவசரத்தில் மணத்தை முடித்துக்கொண்டு அப்புறம் அல்லல்படுவது உசிதமல்ல என்று அவளுக்குத் தோன்றிற்று. அப்போது அவள் எழுதியிருந்த பரீட்சையின் முடிவு தெரிந்தது. அதில் சிந்தாமணி கீர்த்தியுடன் விளங்கினாள்.

சிந்தாமணியின் தகப்பனுரிருந்து வந்த கம்பெனியின் தலைவர் அவள் பரீட்சையில் தேறியதை அறிந்து கம்பெனியின் நன்றி யறிதலுக்கறிகுறியாகக் குலசேகரர் வகித்துவந்த ஸ்தானத்தையே அவளுக்குக் கொடுப்பதென்று தீர்மானித்துள்ள நற்செய்தியை அவளுக்குத் தெரிவித்தார். அவள் உடனே பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினர். இது சிந்தாமணி எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி. வலியவந்த இந்தப் பதவியை தான் நிர்வகிக்கக் கூடுமென்று நம்பினுள். கம்பெனி விஷயங்கள் பல ஏற்கெனவே அவள் அறிந்தவை. கம்பெனியின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்தானத்தை ஒப்புக்கொண்டாள். முதல்நாள் காரியம் பார்த்தவர் மறுநாள் காரியங்களைத் தொடர்ச்சியாகப் பார்ப்பதுபோ லிருந்தது சிந்தாமணி காரியங்களைப் பார்க்கத் தொடங்கிய விதம். அவளுக்குத் தான் வகிக்கும் உத்தியோகத்தின் காரணமாக ஒரு மமதையும் கிடையாது. அதிகார தோரணையும் கிடையாது. பார்க்க வருபவர்களை முகமலர்ச்சியோடு வரவேற்பாள்: வெகு விநயத்தோடு வார்த்தையாடுவாள். காரியஸ்தர்களை மரியாதையோடு நடத்துவாள். சிந்தாமணி சேர்ந்தபிறகு காரியாலயமே ஒரு புத்துணர்ச்சியோடு விளங்கிற்று.

சிந்தாமணியில் ஜனங்கள் பல நன்மைகளையும் சௌகரியங்களையும் அடைந்து வந்தனர். காரியாலயங்களில் சிப்பந்திகளின் நன்மையைக் கருதி அவர்களுக்கு வருஷந்தோறும் இரண்டு மூன்று வாரம் ரஜா கொடுப்பது அந் நாட்டின் பழைய வழக்கங்களிலொன்று. இதனல் காரியங்கள் குந்தமாவதில்லை. அதற்கு மாருகக் காரியங்கள் மிக்க திறமையுடன் கவனிக்கப்படுமென்பது முதலாளிகளின் அநுபவம். சிந்தாமணிக்கும வருஷங்கழிந்து இந்த விடுமுறை கிடைக்கும் காலம் நெருங்கியது. பெற்ருேர்கள் மறைந்த சஞ்சலம்: பின் உத்தியோகப் பொறுப்பு. இவைகளுக்குப் பரிகாரமாக நிம்மதியான ஓரிடத்தில் தன் விடுமுறையைக் கழிக்க எண்ணினுள். அதற்கு சமுத்திரதீரம் சரியென்று அவளுக்குத் தோன்

றிற்று. எண்பது மைல் தூரத்திலுள்ள கடலூர் என்னும் பட்டினத்தில் கடலோரத்தி லிருந்த 'கடலகம்' ஹோட்டலில் தங்குவதென்று ஹோட்டல்காரருக்கு எழுதினாள். சமுத்திரத்தின் பக்கமாயுள்ள அறை வேண்டுமென்றும் தெரிவித்தாள்.

குறித்தநாளில் சிந்தாமணி கடலகம் சேர்ந்தாள். டாம்பீகமில்லாமல் வளர்ந்த அவள் பெரிய அந்தஸ்தையடைந்த பிறகும் பழையபடியே இருந்தாள். ஒரு படுக்கை, சேலை சட்டை துவாலைகளுக்கு ஒரு பெட்டி, புத்தகப் பெட்டி ஒன்று, சில்லரை சாமான்கள் அடங்கிய ஒரு சிறு பெட்டி, ஒரு குடை ஆகிய இவையே அவளுடன் வந்தவை. சிந்தாமணிக்கு நகைகள் மேல் ஆசையே கிடையாது. பெண்களுக்கு ஓரிரண்டு நகைதான் அவசியம் என்ற நம்பிக்கையையுடையவள். அவளுக்குக் காதோலை இரண்டு ஜதையுண்டு. கைகளில் ஒவ்வொரு தங்க வளையல். கழுத்தில் ஒருவடம் தங்க சங்கிலி. இடது கைவிரலில் ஒரு மோதிரம். இவைகளெல்லாம் விலையுயர்ந்தவை. பார்ப்பதற்கு அந்தமாயுள்ளவை. சட்டையோ சாரியோ எதுவாயினும் பளபளப்பான வகைகள் மீது அவள் மனம் செல்லாது. பார்வைக்குக் குளிர்ச்சியாய் நீடித்திருக்கக்கூடிய தினுசுகளையே தேர்ந்தெடுப்பாள்.

சிந்தாமணியிலுள்ள ஹோட்டல்களில் சில சௌகரியங்களைக் கருதி பொதுக்கூடங்களில் அங்கே தங்கும் அனைவருக்கும் ஏககாலத்தில் காப்பி சிற்றுண்டி போஜனம் முதலியவைகளைப் பரிமாறுவது வழக்கம். கடலகத்திலும் இதே வழக்கந்தான்.

சிந்தாமணி தங்கியிருந்த அறைக்கு அடுத்த அறையில் சதா சந்தடி. பேச்சு உரத்த குரலில்தான். அதில் 'அலங்கார' சகோதரிகள் இருவர் தங்கியிருந்தார்கள். அவர்கள் போக்கு சிந்தாமணியின் போக்குக்கு நேர் விரோதமானது. நகைகளையும் உடுப்பு

களையும் ஒரு நாளைக்கு இரண்டுதரம் மாற்றுவது அவர்களுக்கு வழக்கம். அவர்கள் சௌக்கிய நிமித்தமாக வந்தவர்களாகக் காணப்படவில்லை. போஜன வேளைகளில் அவர்களுக்குச் சிந்தாமணிக்கு அடுத்த இடங்கள். சிந்தாமணிக்கும் அவர்களுக்கும் ஒருவித பரிச்சயமும் ஏற்படவில்லை. அவர்கள் பார்வையெல்லாம் அதே மேசையில் அவர்களோடு சாப்பிட்டு வந்த ஒரு யௌவன புருஷன்மேல். அவன் பெயர் புருஷோத்தமன்.

புருஷோத்தமனும் சிந்தாமணியைப் போலவே கடலகம் வந்தவன். அவன் ஒரு சுந்தர புருஷன். பெயருக்கேற்ற குணங்கள் வாய்ந்தவன். ஒரு பெரிய தொழிற்சாலையில் பிரதம அதிகாரி. சிந்தாமணியும் புருஷோத்தமனும் இதுவரை ஒருவரை யொருவர் அறியார். ஆனாலும் போஜனசாலையில் சந்தித்ததும் இருவர் உள்ளத்திலும் எழுந்த கிளர்ச்சியே ஒருவரை யொருவர் அறிய ஒரு தூண்டுதலாயிற்று. உள்ளக் கிளர்ச்சிக்கப்பால் அவர்களிடையே ஒரு பாசம் உண்டாயிற்று. இது இரும்புக்கும் காந்தத்திற்கும் உள்ள பாசத்திற்கு மேலாயிருந்தது.

இந்நிலையில் அலங்கார சகோதரிகள் சூழ்ச்சி எப்படிப் பலிதமாகும்?. ஹோட்டலைப் பற்றியோ சிற்றுண்டிகளைப் பற்றியோ, போஜனத்தைப் பற்றியோ, புருஷோத்தமனிடம் பேச்சு கொடுத்துப் பார்த்தார்கள். அவனோ ஒரு சங்கோசக் காரன். சகோதரிகள் கேட்ட அளவிற்குப் பதில் சொல்லி வேறு பக்கம் திரும்பிக் கொள்ளுவான். இரண்டு நாளில் அவர்களுக்கு அவன்மேல் வெறுப் புண்டாயிற்று; தங்கள் கவனத்தை வேறு திக்கு களில் செலுத்தினர்கள்.

போஜன சாலையில் முதல்நாள் காலை வந்தனம் மாலை வந்தனத்தோடு தீர்ந்தது. இரண்டாவது நாள் தான் தாம் இன்னரென்று ஒருவரை யொருவர் அறிந்து தங்களுக்குள் அளவுகடந்த ஆனந்தமடைந் தனர். கல்வியிற்றேர்ந்த ஒரு பட்டதாரி பெரிய

உத்தியோகத்தை வெகு மதிப்போடு நிர்வகிக்கும் ஒரு இளநங்கை, இப்படிச் சாதாரணமாக நடப்பதைக் கண்டு புருஷோத்தமன் வியப்புற்றுன். அவள் குணதிசயங்கள் அவ்வளவும் அவன்முன் சிறந்து விளங்கின. சிந்தாமணியின்பாலும் புருஷோத்தமனைப்பற்றி நல்லுணர்ச்சிகள் எழுந்தன. இவ்வாருக ஒரு வாரம் கழிந்தது. இருவரும் நெருங்கிப் பழகச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. உத்தியோக நிர்ப்பந்தங்களிலிருந்து சிலநாள் விலகி இருக்கவேண்டி வந்தவர்கள் அமைதியைக் காணவில்லை—விரகாவஸ்தையின் வாய்ப்பட்டார்களாகையால்.

கடலூரில் பல தோப்புகளும் மரங்களடர்ந்த சிறு குன்றுகளும் உண்டு. சிலர் சாப்பாடு அல்லது சிற்றுண்டியோடு தோப்புகளுக்குச் சென்று அங்கே நிழலில் படிப்பது சீட்டாடுவது அல்லது இளைப்பாறுவது வழக்கம். சிந்தாமணியின் மனவமைதி இப்போது கலைந்திருந்ததால் ஒரு பகல் வெளியே சென்று வரலாமென்று அவளுக்குத் தோன்றிற்று. காலைப் போஜனத்திற்குப்பின் பிற்பகலுக்கு வேண்டிய தேநீரையும் சிற்றுண்டியையும் எடுத்துக்கொண்டு பொழுது போக்குவதற்காக சமீபத்தில் வெளியான ஒரு நாவலோடு புறப்பட்டாள். சற்று நேரங் கழித்து இதே எண்ணத்துடன் இதேமாதிரி புருஷோத்தமனும் ஹோட்டலின் பின்புற வழியாகப் புறப்பட்டான். வழியில் ஒரு புத்தகக் கடையைக் காணவே பொழுதுபோக்குவதற்காகுமென்று நவீன மொன்றை வாங்கினான். அதுவும் சிந்தாமணி எடுத்துச் சென்ற நவீனமும் ஒன்றே.

சிறிது நேரத்தில் தனக்கெதிரில் தோன்றிய ஒரு தோட்டத்திற்குள்ளே புருஷோத்தமன் நுழைந்தான். அதே சமயத்தில் சிந்தாமணியும் அதே தோட்டத்திற்குள் மற்றொரு வழியாகப் பிரவேசித்தாள். ஒருவரை ஒருவர் பார்க்காமலே இருவரும் தோட்டத்திற்குள் சௌக்கியமான ஒரு பாகத்தைத்

தேடி ஒருவரையொருவர் நெருங்கி வந்துகொண் டிருந்தார்கள். செடிகொடிகளடர்ந்து மறைவான ஒரு பக்கத்தை நோக்கிச் சிந்தாமணி நடந்துகொண் டிருந்தாள். அதே இடத்தை நாடி புருஷோத்தம னும் நடந்தான். இப்படி நடந்துவந்த இருவரும் இரண்டு பக்கங்களிலிருந்து ஒரே சமயத்தில் அந்த மறைப்புக்குள் நுழைந்தார்கள். அப்படி நுழைந்த பிறகே தங்கள் தலைகளை நிமிர்த்தினார்கள். ஒருவரையொருவர் அப்போதுதான் பார்த்தனர். இருவரும் ஏககாலத்தில் ஒரே குரலில், "எனக்காகத் தாங்கள் தயங்கவேண்டாம். நான் வேறொரு பக்கம் செல்கிறேன்," என்று சொல்லி வந்த வழியே திரும்பினார்கள். ஆனால் ஒருவரும் மறைப்பை விட்டு வெளியே செல்லவில்லை. வெளியே செல்ல மனமும் இணங்கவில்லை. ஒரு வலம் வந்து பழையபடியே ஒருவர் முன் ஒருவர் நின்றனர். இருவரும் எதிர் பார்க்காமல் சந்தித்தாராயினும் ஒருவரை விட்டு ஒருவர் அகல இருவருக்கும் மனமெழவில்லை. இரு வரும் அவ்விடத்திலேயே தங்கலாமென்று சொல்லிக் கொள்ளவும் லஜ்ஜை. இந்தத் தடுமாற்றத்தில் இரண் டொரு நிமிஷங் கழிந்தது. தற்செயலாக நேர்ந்த சந்தர்ப்பத்தைக் கைவிட யார்தான் பிரியப்படுவார் கள்? ஆனால் யார் முதலில் மேலே பேசுவதென்று இருவருக்கும் புரியவில்லை. எப்படியும் ஆண் பிள்ளை யாகையால் புருஷோத்தமன் ஒரு அசட்டுச் சிரிப் புடன் சிந்தாமணியை நோக்கி, "தங்களுக்கு ஆட்சே பனை இல்லையாகில் இருவரும் இங்கேயே உட்கார லாமே. நாமிருவரும் ஒரே எண்ணத்துடன் புறப் பட்டதாகத் தோன்றுகிறது. அதிர்ஷ்ட வசத்தால் இருவரும் இதே இடத்தைத் தேர்ந்தோம். தாங்கள் இன்னும் நிற்கவேண்டாம். தயைசெய்து உட்கார லாமே," என்றான். இதற்கென்ன பதிலுரைப்ப தென்றெண்ணி சிந்தாமணி நாணத்துடனும் புன்முறுவலுடனும் தலையிறங்கியபடியே, "தாங் கள் அமர்ந்தால் நானும் அமருகிறேன்," என்று சொல்லிக்கொண்டே அவ்விடத்தில் அன்னியர்

யாரேனும் தங்களைக் கவனிக்கின்றனரோவென்று சுற்றுமுற்றும் பார்த்தாள். புருஷோத்தமன் அவளுக்கு வந்தனஞ்சொல்லி தரையில் உட்கார்ந்தான்.

உட்கார்ந்தபின் பேசுவதற்கு ஒரு விஷயமும் தோன்ருது இருவரும் மௌனமாயிருந்தனர். முதலில் யார் பேசுவது, என்ன பேசுவது என்று இருவருக்கும் விளங்கவில்லை. அப்போது தாங்கள் கொண்டுவந்த புத்தகத்தின் மேல் இருவர் கவனமும் செல்லவே இருவரும் ஏக காலத்தில் தம் புத்தகத்தையெடுத்து மற்றவர்முன் வைத்தார்கள். ஏககாலத்தில் இருவரும் தம்முன் வைக்கப்பட்ட புத்தகத்தின் பெயரை வாசித்தார்கள். ஒருபக்கம் நாணம். ஒரு பக்கம் அடக்கமுடியாத சிரிப்பு. இருவரும் கலகலவென்று சிரித்துவிட்டார்கள். 'என்ன ஆச்சர்யம்?' என்ருர் இருவரும் ஒரு குரலில். சம்பாஷணை தொடர்வதற்கு இது ஒரு வழியாயிற்று.

சிந்தாமணியும் புருஷோத்தமனும் சின்னஞ்சிறுவர்களல்ல. கல்வி கேள்விகளிற் றேர்ந்து உயர்ந்த பதவிகளை வகிப்பவர்கள். ஆகவே நாணமும் ஆச்சரியமும் அவர்களை நெடுநேரம் பாதிக்கவில்லை. பல விஷயங்களைப் பற்றிப் பேசவாரம்பித்தனர். ஆனுலும் இருவர் மனதிலும் குடிகொண்டிருந்த ஓர் எண்ணம் இவர்கள் தாராளமாகப் பேசுவதற்கு இடையூராக விருந்தது. இரண்டொரு மணி நேரங் கழிந்தபின் அவர்கள் சிறிது மன நிம்மதியோடு சம்பாஷித்தனர். அப்போது சிற்றுண்டி கொள்ளும் வேளையாயிற்று. அவர்கள் கொண்டுவந்த தினுசுகள் வெவ்வேறு தினுசுகளாக வமைந்திருந்தது ஒரு அனுகூலமே. ஒருவருக்கொருவர் பறிமாறிக் கொள்ளவேண்டியதாயிற்று. கடைசியாக, தேநீர் அருந்திய பிறகு இருவருக்கும் ஏற்கெனவே உண்டாயிருந்த உற்சாகம் அதிகரித்து மேலே பொழுது சாயச்சாய இரு மனமும் ஒரு மனமாயிற்று.

குழந்தையின் தாய்

"சுகி"

டாக்டர் போனதும் மௌனம் நிலவியது. கனகாம்பரம் கட்டிலில் படுத்தபடியே முணகிக் கொண்டிருந்தாள். வெகு நேரமாகச் சும்மா கிடந்த குழந்தை வீறிட்டு அலறியது, சிவஞானம் பொறுமையை இழந்துவிட்டார்.

"சற்று எடுத்துவிடேன்! காது கேக்கலையா?"

சிவஞானம் தம் மனைவி மனித சுபாவத்தோடு பதில் சொல்லுவாள் என்று நினைத்தார். தம்மை இடித்துக் காட்டி குத்தலாகப் பேசுவாள் என்று எதிர்பார்க்கவில்லை.

"விடிய விடிய டாக்டர் சொன்னரே. 'குழந்தையின் நோய், உங்கள் துர்நடத்தையால் வந்தது. தாய்க்கும் வரலாம்' என்று அதை மறந்துவிட்டீர்களா?"

"நான் மறந்துவிட்டேன். குழந்தைக்காக உன் தாயுள்ளம் இரங்கவில்லையா? மனம் என்ன கருங்கல்லா?"

கனகாம்பரம் எம். ஏ. பட்டதாரி. குழந்தை என்பது ரஸாயனச் சேர்க்கைக்கு உட்பட்ட சில பொருள்களின் சேர்க்கை என்பதை அலசிப் படித்தவள். ஏற்கனவே தாய்ப்பால் கொடுக்க விரும்பவில்லை. விருப்பம் இருக்கட்டும்: கொடுக்க அங்கே என்ன இருக்கிறது? டாக்டர் வேறு சர்டிபிக்கெட் கொடுத்துவிட்டார்!

குழந்தையின் அலறல் அதிகமாக மல்லு மல்லென்ற அழுகையால் தொண்டைகட்டி ஈனசுரம் தட்டியது: சிவஞானத்தின் உள்ளம் கொதித்தது.

தன் பால்ய சேஷ்டையைக் குத்திக் காட்டியதும், குழந்தையை அலக்ஷியம் செய்ததும் அவர் மனதில் வேலாகப் பாய்ந்தது. "குழந்தைக்குப் பால் கொடுக்கப் போகிருயா, இல்லையா?" என்ருர்.

அப்பட்டதாரி, "என்னைக் கட்டுப்படுத்த முடியாது," என்ருள்.

"உன் உயிர்தானு பெரிசு? குழந்தை: ஆசைக் கனியின் அருமைக் குழந்தையின் கதறல் உன் இதயத்தைத் தொடவில்லையா?

"அது வியாதி சொரூபம். என் உயிரைப் பாழாக்க நான் முட்டாளல்ல!" என்று எதிர்வாதம் செய்தாள். அவள் கட்சி நியாயமானதுதான், தர்மமானதில்லை யென்பதுபோல் அம்மி மிதித்து அருந்ததி பார்த்துக் கட்டிய மனைவியின் முகத்தைப் பார்த்தார்.

வெறி பிடித்தவர்போல், "என் முகத்தில் முழியாதே. படித்த மிருகம்; உணர்ச்சியில்லாத கட்டை. வியாதி வருமாம்!" என்று கடிந்தார்.

கனகாம்பரம், எம். ஏ., தடதடவென இறங்கிப் போய்விட்டாள். தன் தகப்பனுர் வீட்டிற்கு. ஆம், கொடைக்கானலுக்குத் தான்!

சிவஞானம் பெரிய இடத்துப் பிள்ளை: படித்தவர்: மேதாவி. பணத்தால் எதெல்லாம் சாதிக்கலாமோ அவ்வளவும் சாதித்தவர். தம்முடைய பாவத்தின் நிழலைத் தொட்டிலில் பார்த்துப் பார்த்து மனம் பொருமினுர். மனமும் மெய்யும் கலங்கியது. தாம் கலியாணம் வேண்டாமென்று வாதாடியும் தன் பெற்ருேர் தனக்கு மணமும் மாலையும் கொடுத்தது பற்றி வருந்தியவர், சிறு பிள்ளைபோல், அழுதார்.

எதிரொலிபோல் அழுகைச் சப்தம் கேட்டது. குழந்தையின் துடிப்பு சகிக்கக்கூட வில்லை. பெற்றவள் போய்விட்டாள்; அவருடைய வயதான தாயார் குழந்தையை யெடுத்து ஆசுவாசப் படுத்தினுள்.

அன்றிரவு அவர் மனம் பழைய நாட்களை எண்ணி எண்ணி வேதனை வெள்ளத்தில் உழன்றுகொண்டிருந் தது.

II

உதய காலத்தின் முதற் கிரணததால் கீழ் வானம் பல்லாயிரக் கணக்கான ரோஜா இதழ்களை சிதறியதுபோன்று சிவக்க ஆரம்பித்தது. மாங்குயில் களின் கலகலவென்ற ஓசையும், குளிர்ந்த காற்றின் ஜிலுஜிலுவென்ற அசைப்பும் சிவஞானத்தின் அறைக் குள் விளையாடின. புள்ளினங்களின் வழக்கமான மதுரநாதம் அவருக்கு சொப்பனம்போல் கேட்டது.

மெட்டியின் காலடி ஓசை கேட்டது. கனகாம் பரம், எம். ஏ., வந்துவிட்டதாக ஆவலுடன் திரும்பிப் பார்த்தார். “அம்மா, அம்மா, பெரியம்மா,” என்று குரல் கொடுத்த வண்ணம் குட்டியம்மாள் வந்திருந் தாள். அவளை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தார்.

குட்டியம்மாள் நாட்டுப்புறத்தழகி. அள்ளிச் செருகிய கூந்தல் பாரம். பளிச்சென்ற முகம். அற் புதமான புன்சிரிப்பு. முந்தானையைக் குறுக்காகச் சுற்றிக் கட்டி யிருந்தாள். அவள் ஏன் வரவேண்டும்?

பெரியம்மா வந்தாள். “குட்டியம்மா வந்திட் டியா. ரொம்ப சந்தோஷம். கடவுள் கண் திறந்தார்,” என்று பீடிகை போட்டாள். வாசலில் நின்ற குட்டி யம்மாள் வீட்டுக்குள் நடந்து வந்தாள். அந்நடை மனோகரமான நடை. கட்டமைந்த தேகத்தை எப் படி மிருதுவாக எடுத்து வைக்கிறாள்! அவள் அழகு மலைக்கொடியின் செழுமை போன்றது. அழகுரேகை பால்ய சூரியனின் கிரணங்களால் ஒளி வீசியது. கருங் கூந்தலின் பிரகாசத்தை அவர் பார்த்துப் பார்த்து வியந்தார். அவள் முகத்தில் ‘லக்ஷ்மிகளை’ குடிகொண்டிருந்தது.

கனகாம்பரத்தின் அழகு சொட்டும் சொர்ண பிம்பரூபம் நினைவு மாலையில் சிக்குண்டது. அவள்

மேனியின் ஒயில் சூரியப் பிரகாசம் போன்றது. இவளோ சந்திர சோபை போன்றவள். சிரித்த முகங்கள்தான் இரண்டு பேருக்கும். ஆனால் புயலில் சிக்குண்ட ஒருவனுக்கு அமைதியின்போது தென்றலின் இன்ப ஸ்பரிசம் பட்டால் எப்படி யிருக்குமோ, அப்படி யிருந்தது சிவஞானத்திற்கு.

சூரிய ஒளி வானத்திற்கு எட்டியது; அவளுடைய வாழ்க்கையின் உதயகாலம்போல் குட்டியம்மா தோன்றினாள். அன்று விடிந்தபொழுது சுபமாகத்தான் விடிந்தது.

"குட்டியம்மா...இந்த குழந்தைக்கு இன்று முதல் நீதான் தாய். மாதம் 15 ரூபாய்........பால் கொடம்மா," என்றாள் உலகத்தை அறிந்த சிவஞானத்தின் தாயார். அச்சொல்லை, சிவஞானம் நம்பவே யில்லை. இளமையின் துடிப்பு நிறைந்த அந்த கிராமப் பெண்ணை ஒருமுறைப் பார்த்தார். சிந்தனைச் சக்கரத்தில் ஏதோ தடைப்பட்டது.

குட்டியம்மாள், "என் பெரியம்மா......உங்க மருமக......" என்று மேலே சொல்லுமுன், அம்மாள் சைகை செய்தாள். குட்டியம்மாள் அவர் இருந்த அறையைத் தாண்டிச் சென்றாள்.

குழந்தையைப் பொதியாகத் துணிமணிக்குள் சுருட்டிக் கொண்டுவந்து கொடுக்கவே, குட்டியம்மாள் மலர்ந்த முகத்துடன் ஆசை நிறைந்த கண்களுடன் துடிக்கும் உதடுகளோடு வாங்கி, ஒரு முதம் கொடுத்து, உடல் புளகிதம் அடைந்து நின்றாள்.

சிவஞானம் சொப்பன நித்திரையில் இருந்தார். அவர் அதை நம்பவேயில்லை. அதைத்தூக்கி முத்தமிடுகிறது—உண்மையாகப் பார்க்கிறாரா? மீண்டும் உச்சி முகர்ந்தபோது குழந்தையின் அழுகை அவர் இதயததைத் தாக்கியது, "இந்தாம்மா, குழந்தையை நீ தொடாதே..."

"என் கருப்பு ஒட்டிக்கொள்ளுமா ஐயா?" என்று கேலியாகச் சிரித்தாள். அவள் இன்னும்

அணைப்பாக குழந்தையைவைத்துக்கொண்டதை சிவ ஞானம் பார்த்து பரிதாபம் கலந்த குரலில் கெஞ்சினர்.

"அம்மா.. அது வியாதியுள்ளது. அதன் வியாதி உனக்கு வரலாம்!"

"போடா முட்டாள். குட்டியம்மா, அவன் சொல்றதை நம்பாதே," என்று மழுப்பினள் தாயார்.

குட்டியம்மாள் முகத்தில் லக்ஷிமிகரம் அப்படியே இருந்தது. வியாதியென்றதால் துளிமாறுதல்கூட இல்லே. அவள் களங்கமற்ற முகத்தில் தாயுள்ளத்தின் சோபை படர்ந்தது.

சிவஞானம், "அம்மா, நீ பணத்திற்கு ஆசைப் படாதே. வியாதி......தொட்டால் உன்னை ஒட்டிக் கொள்ளும். பால் கொடுக்காதே......" என்ருர்.

குட்டியம்மாள் எக்காளத்துடன் சிரித்த பரிகாசச் சிரிப்பு அந்த அறையில் எதிரொலித்தது. "சாமி உங்களைப்போல நான் படிச்சவள் இல்லே. வியாதி எங்களை ஒட்டிக்காது. கிருமியென்கிறவங்களுக்குத்தான் வியாதி," என்று தன் மனதில் இருந்ததைச் சொன்ஞள்.

தாயார் குமாரனை எமன்போல் பார்த்தாள். அவள் பார்வையில், நெருப்பின் ஜுவாலே தகித்தது! அவரோ குழந்தைக்கு எமன்போல் தடுக்கிருர். விதியின் விஷப்பரிக்ஷை!

"இந்தாம்மா, நீ சுத்தப் பட்டிக்காடு; உனக்கு வியாதியின் தன்மை தெரியாது. டாக்டர் சொன்ஞர்......"

"டாக்டர்தான் கிருமியைக் கண்டார்? போங்கசாமி...' என்று குழந்தையோடு அறைக்குள் நுழைந்தாள். சிவாஞானம், "குழந்தையைவிட்டு விடு. கிருமிவிவகாரம் தெரியாதவள். அம்மா, என் குழந்தையை வாங்கேன். நான் செய்த பாவத்திற்கு

ஒன்று மறியாத ஒரு ஜீவனைப் பழிவாங்காதே. நான் செய்த பாவத்தை நானே அனுபவிக்கவேண்டும்," என்று கதறினர். உள்ளே அம்மாள் பீரோவைத் திறந்து மூடினள்; வெளியே வந்தாள், குழந்தையை வாங்குவதற்கல்ல! குட்டியம்மாவின் கையில் பணம் கொடுப்பதற்குத்தான்.

"சாமி, நாங்கவெறும் பட்டிக்காடுதான். உங்களைப்போல நோஞ்சானைத்தான் வியாதி அண்டும். எங்க உடம்பிலே......இருப்பு சாமி...இரும்பைச் செல்லரிக்காது..." என்று இன்னும் சொல்ல வந்தவள், சொல்லாமல் விட்டுவிட்டாள். அவள் பேச்சு ......அவள் மனதைப்போல, தேகரத்தத்தைப்போல சுத்தமாக இருந்தது. உதடுமட்டும் பேசவில்லை: உள்ளமும் பேசிற்று.

மீண்டும் குழந்தையை வாங்கும்படி தாயைக் கெஞ்சினன். "போடாப்பா......குழந்தையாம்...... நியாயமாம். உலகத்திலே எல்லாரும் கனகாம்பரம் இல்லே. சோலியைப் பார்த்துக்கொண்டு இரு," என்று அதட்டலாகச் 'சூடு' சொன்னள்.

அவர் மனசாட்சியின் ஆதிக்கம் தாங்காமல், "ஐயோ, பெண்ணே...நீ பணத்தாசைப் படாதே. உன் குழந்தை...குடும்பம்...எல்லாம் தெருவில் நிற்கும்..." என்று உணர்ச்சியோடு கதறினர்.

"நாங்க கஷ்டப்படவே பிறந்தவங்க சாமி, காசு பெரிசா சாமி? குழந்தை எதுன்னு என்ன? அது தெய்வமில்லா சாமி? தெய்வத்திலே வித்தியாசம் இல்லே..." இதற்குமேல் பேச முடியாமல் கண்ணீர் உகுத்தாள். திடீரென மின்னல்போல ஒருமாதத்திற்கு முன் மூன்றுமாதக் குழந்தையைப் பறிகொடுத்தவள், நெஞ்சம் குமுறி அழுகையாகப் பொலபொலவெனக் கண்ணீர் உகுத்தாள். வெறி பிடித்தவள் போல, ஆசை நிறைந்த முகத்தோடு குழந்தையை முத்தமிட்டுக்கொண்டே அறைக்குள் போய் விட்டாள். தண்ணீருக்குள் புரளும் மீன்போல், கண்ணீர் நிறைந்த அக்கண்கள் அவரைப் பார்த்தன!

சிவஞானம், "அம்மா என் பாபத்திற்கு நீ தண்ணீர் விட்டு வளர்க்கிறாய்...குழந்தையை வாங்கேன்," என அறைக்கு வெளியே நின்று கதறினார். தன் பாவம் தன்னோடு, தன் குழந்தையோடு நிற்கட்டும் என்ற மனத்துயரால் அப்படிக் கதறினார்.

ஆனால், உள்ளே குழந்தை அருள் சுரந்த மார்பிலிருந்து அமுதம் பருகிக்கொண்டிருந்தது.

III

கால வெள்ளத்தில் மனச்சாட்சியின் நினைவு சாம்பலாகிவிட்டது. குழந்தையும்,.. குழந்தையாக வளர்ந்து வந்தது. சென்ற ஆறுமாதகாலமாகக் கனகாம்பரம், எம். ஏ., வருவாள் என்று நினைப்பதும் கடிதமாவது வருமென்று நினைப்பதும் உண்டு. அவள் என்ன பட்டிக்காடா? படித்த மேதாவியில்லையா? பெரிய இடமாக இருந்ததால், டாக்டரின் தயவாலும், குட்டியம்மாளின் அருளாலும் குழந்தை உயிர்பெற்றது.

குட்டியம்மாள், 'பத்து' விளக்குகிற தன் ஜீவியத் தொழிலை விட்டு, சம்பள பிரமோஷனுடன் ராஜ போகமாக அம்மாவின் மாயவலைக்குள் இருந்தாளோ, குழந்தையின் மேலுள்ள இரக்கச் சித்தத்தால் இருந்தாளோ, தெரியவில்லை. தினம் தினம் காலைமாலை வருவாள்...சில சமயம் அங்கே தங்குவதும் உண்டு.

ஒருநாள்...அதிகாலை...வரவேண்டிய குட்டியம்மாள் வரவில்லை. விடிந்தும் விட்டது; குழந்தையின் அழுகைக்குரல் சிவஞானத்தின் காதில் தாக்கியது. ஆறுமாதத்திற்குமுன் உதயகாலம் போல் வந்த குட்டியம்மாள் வரவு நினைவில் சுழன்றது. குருவிகள் கூக், குரல் பொறுக்க முடியவில்லை. பால்காரன் வரவிற்காகக் கன்றும் பசுவும் கதறியன.

இடிமுழக்கம்போல் அவர் உணர்ச்சி சுழிப்பில் தாக்கியது. உள்ளே அழுகிற குழந்தையைத் தாயார் தாலாட்டிக்கொண்டிருந்தாள்.

வாசற்படியில் நின்ருர். தோட்டத்தில் பார்த்தார். ஆள் அனுப்பலாமென்ருல் வீடுமாற்றலாகி இருப்பதை அறிந்தார். அன்று மத்தியானம் வரை துன்பச்சுழலில் இதயம் படாதபாடுபட்டது. காலடி கேட்டு வந்தார். அங்கே கூழைக்கும்பிடு போட்டு, "சாமி," என்ருன் ஒரு நாட்டுப் புறத்தான். அவன் தான் குட்டியம்மாள் கணவன்.

வந்தவன், "சாமி குட்டிக்கு உடம்பு சரியில்லே. சொல்லிட்டு வரச்சொன்னுள். குழந்தையைச் சாக்கிரதையா பாத்துக்கொள்ளச் சொன்னுள்," என்ற அவன் வார்த்தைகள் விஷம்போல் இருந்தன.

தாயார் ஒரு கையில் குழந்தையும் ஒரு கையில் நோட்டுகளுமாக வந்து, "உடம்பை சாக்கிறதையாகப் பார்த்துக்கொள்ளச் சொல். இந்தா அம்பது ரூபாய்," என்றதும், பயபக்தியுடன் அவன் சந்தோஷத்தோடு வாங்கிக் கொண்டு போய்விட்டான். அவன் முகமலர்ச்சியைக்காண, சிவஞானத்தின் மனம் பதை பதைத்தது.

துக்கமும் சோகமும், நிறைந்து, "அம்மா... நான் மகாப்பாவி...குட்டியம்மாவிற்கு என் குழந்தை எமனுக வந்து விட்டதே!" என்று அழமாட்டாத குறையாய் அழுதார். அம்மா அதை லக்ஷியமே செய்யவில்லே.

மறுநாள் குட்டியம்மாள் ஆஸ்பத்திரிக்குப் போனுள். மறுபடி அவள் வீட்டிற்குத் திரும்பவில்லே. போனவள் போனவள்தான். அந்த அனுதைக் குழந்தை தாய்க்காக ஏங்கிக் கிடக்கிறது.

4 - MAY 1944
MADRAS

மனமே காரணம்

பெ. தூரன்

காளியம்மாளுக்குத் தாங்க முடியாத துக்கம். நினைக்க நினைக்க அவள் உள்ளம் குமுற ஆரம்பித்தது ; துக்கம் மலை மலையாகப் பெருகிற்று. அவள் ஆசையோடு கேட்ட சேலையைத் தகப்பனார் வாங்கி வரவில்லை. அதுவும் தலை தீபாவளிக்கு! விசனத்திற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? முதல் தீபாவளிக்கே இப்படியென்றால் பின் என்ன இருக்கிறது? அவள் சென்ற ஒரு மாத காலமாக எண்ணி எண்ணி மகிழ்ந்ததெல்லாம்; கண்ட கண்ட கனவெல்லாம் சிதறிப்போய்விட்டன. தனது கணவனோடு பூரிப்புடன் பிறந்தகத்துக்குத் தீபாவளிக்காக இரண்டு நாள் முன்னதாகவே வந்ததும், வந்த மறுநாள் மாலை தகப்பனார் வாங்கிவந்த வேறொரு சேலையைப் பார்க்கும் வரை அவள் குதூகலமாக இருந்ததும். இப்பொழுது மறைந்துவிட்டது.

ஆனால் தீபாவளி இவள் வருத்தத்தைக் கண்டு வராமல் நிற்கிறதா? அந்த ஊரிலும் தீபாவளிதினம் எண்ணெய்த் தேய்ப்பு, புத்தாடை, பணியாரவகைகள் முதலிய சிறப்புக்களுடன் புலர்ந்துவிட்டது.

அன்று காலையில் காளியம்மாள் எண்ணெய் ஸ்னானம் கூடச் செய்து கொள்ளவில்லை. தலைவலி என்று இழுத்துப் போர்த்துப் படுத்துக்கொண்டாள். மத்தியானம் வரை எழுந்திருக்கவேயில்லை. அவள் தாயார் கருப்பாயி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக வந்து தொந்திரவு செய்ததின் பேரில் மத்தியானம் சிறிது சாப்பிட்டுவிட்டு மறுபடியும் படுத்துக் கொண்டாள்.

கருப்பாயி மகளிடம் சமாதானம் சொல்வதும் தன் கணவனிடம் போய் அழுதவண்ணம் முறையிடுவதுமாக இருந்தாள்.

மாப்பிள்ளைக்கு இந்தப் பிணக்கு விஷயம் ஒன்றுமே தெரியாது. அவர் புது வேஷ்டி உடுத்திக்கொண்டு, விருந்து சாப்பிட்டுவிட்டு மைத்துனன்மார்களோடு உல்லாசமாக இருந்தார். மனைவி புதுச் சேலை கட்டிக்கொண்டு ஏன் தன்னிடம் இன்னும் வரவில்லை என்று மட்டும் கொஞ்சம் ஏக்கம். ஆனால் இடைவிடாது தன்னுடன் மற்றவர்கள் இருந்துகொண்டிருப்பதினால் வரவில்லை போலும் என்று தனக்குள்ளேயே ஒரு சமாதானமும் செய்துகொண்டார். கருப்பாயியின் விசனமும் கோபமும் கலந்த குரல்கூட அவருக்குக் கேட்கவில்லை. அவையெல்லாம் மேல்புறம் புறக்கடையில் நடந்த காட்சிகள்.

"அப்பவே நான் சொன்னேனே; அந்தச் சீலையை வாங்கிக்கிட்டு வந்திருந்தா என்ன போச்சு?" என்று ஆரம்பித்தாள் கருப்பாயி.

அவள் கணவர், பெரியதம்பிக் கவுண்டர், "என்னமோ வாங்கியாச்சு. இப்போ என்ன பண்ணரது? இன்னொரு தடவைக்கு அதையே வாங்கிக் கிட்டாப் போவுது, ஒடியா போகும்? இதுவும் என்ன, அதுக்குக் குறைஞ்சுதா? அது 120 ரூபா; இது 115 ரூபா" என்று சமாதானம் சொன்னார்.

"அஞ்சு ரூபாதானே எச்சு, அதையே வாங்கிக்கிட்டு வர்ரத்துக்கென்ன?"

"என்னமோ ஏமாந்து போச்சு. நான் விலை எச்சுன்னு வாங்காமெ வல்லெ. இதே நல்லாருக்குதுனு அல்லாருஞ் சொன்னங்கோ: எனக்கும் புடுச்சுது; எடுத்துக்கிட்டு வந்தே. சொல்லி உடுத்திக்கச் சொல்லு."

"நீங்களே போய்ச் சொல்லுங்க. நான் சொல்லியாச்சு. உங்ககிட்டே நானொருத்தி சிக்கிக்கிட்டே" என்று கருப்பாயி சொல்லிக்கொண்டே போனாள்.

இப்படி வாக்குவாதம் அரைமணிக் கொரு தடவை நடந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு தடவையும் தாயார் கை உயர்ந்தது.

மாலை மூன்றுமணி சுமாருக்குக் காளியம்மாள் எழுந்து ஊருக்கருகிலுள்ள அவர்கள் தோட்டத்தை நோக்கிப் புறப்பட்டாள். படுத்துப் படுத்து அவளுக்கே சலித்துவிட்டது. அவள் வருவதைக்கண்ட பெண்கள் அனைவரும் அவளுடைய புதுச்சேலையைப் பார்க்க வேண்டுமென்று ஓடிவந்தார்கள். அவர்களுக்கு ஒரே ஏமாற்றம்: திகைப்பு.

"காளியாத்தா, ஏன் பழைய துணியைக் கட்டிக் கிட்டிருக்கிறே?"

எல்லோர் வாயிலும் இதே கேள்விதான். காளியம்மாளுக்குப் பதில் சொல்வதே கஷ்டமாகிவிட்டது. "உடம்புக்கு நல்லால்லே. குளிச்சுக்கிலே" என்று சொல்லியும் சொல்லாமலும் வேகமாக நடந்தாள்.

மாரப்பம்பாளையத்தில் பெரியதம்பிக் கவுண்டர் தான் பெரிய பணக்காரர். அவர் வீட்டில் நடக்காத சிறப்பு அந்த ஊரில் வேறு எங்கும் இல்லை. காளியம்மாள் இப்படிப் போவதைக் கண்டு யாராலும் ஆச்சரியத்தை மறைக்க முடியவில்லை. காளியம்மாளுக்கும் அவர்களது மனது தெரிந்துவிட்டது.

சீக்கிரமாகத் தோட்டத்துக்குள் நுழைந்து ஒரு சங்கம் புதர் மறைவில் தனியாக உட்கார்ந்து கொண்டாள். அவள் மனதில் எத்தனை எத்தனை எண்ணங்களோ எழுந்து மறைந்தன. ஒவ்வொரு சமயம் அவளையும் அறியாது ஒரு துளி கண்ணீர் முத்து போல் அவள் கண்களில் தோன்றியது. அவளுக்கு நேரம் போவதே தெரியவில்லை. வீட்டை விட்டுத் தோட்டத்திற்கு வந்ததும் அவளுக்கு இப்பொழுது துன்பமாகத் தெரிந்தது. திரும்பிப் போகும் போதும் பெண்கள் அவளை அதே கேள்வியுடன் மொய்த்துக் கொள்வார்களே!

வெகுநேரம் கழிந்துவிட்டது. சங்கம் புதரின் மறுபுறமாகத் தூரத்தில் யாரோ இருவர் குதூகலமாகப் பேசும் குரல் கேட்டது.

"சின்னம்மா, தீபாவளிக்கு வந்தியா?"

"ஆமா அக்கா, அப்பன் வந்து கூட்டிக்கிட்டு வந்தாங்கோ; அவுங்களும் வந்திருக்கிறுங்கோ."

"இந்த சீலை நல்லாருக்குது! என்னவெலை?"

"சந்தையிலே அம்மா எடுத்தாந்தா. அஞ்சு ரூபா விலை. அவுங்களுக்கு ரண்டு ரூபாயிக்கி வேட்டி, துண்டு அல்லா எடுத்திருக்குது."

இருவரில் சின்னம்மா பெருமையோடு பேசினுள். அவள் இடையில் சிவப்பும் மஞ்சளும் தலைதடுமாறிக் கிடந்த ஒரு தட்டுச்சீலை பளிச்சென்று பிரகாசித்தது. வாய் நிறைய வெற்றிலை. கொண்டை நிறைய மருக்கொழுந்து. முகத்தில் களி.

சின்னம்மாள் பெரிய தம்பிக் கவுண்டர் பண்ணையத்தில் இருபது வள்ளம் கூலிக்கு வேலை செய்யும் ஒரு பண்ணையாளின் மகள். அவளுக்கும் காளியம்மாளுக்குக் கலியாணமான அதே மாதத்தில்தான் கலியாணம் நடந்தது. அவளும் இப்பொழுது தலை தீபாவளிக்கு வந்திருந்தாள்.

சின்னம்மாளுக்கும் காளியம்மாளுக்கும் சிறு வயதிலிருந்தே சிநேகிதம். இருவரும் ஒன்ருக வளர்ந்தவர்கள். காளியம்மாளுக்கு எல்லாக் கைவேலைகளும் செய்பவள் சின்னம்மாள்தான். அவள் தனது தீபாவளிச் சேலையைக் காளியம்மாளுக்குக் காண்பிக்க வேண்டுமென்று ஆவலோடு வந்து கொண்டிருந்தாள். மறுபுறம் புதர் மறைவில் காளியம்மாள் விசனக் கடலில் மூழ்கியிருப்பது அவளுக்குத் தெரியாது

"சின்னம்மா, இப்போ எங்கே போரே?" என்று அவளுடன் பேசியவள் மேலும் கேட்டாள்.

“காளியாத்தா வந்திருப்பா. அவளைப் பார்க்கப் போரேன். நான் புதுச்சீலே கட்டிக்கிட்டு வாரதைப் பாத்தா அவளுக்குச் சந்தோஷமா இருக்கும்,” என்ருள் சின்னம்மாள்.

இந்தப் பேச்செல்லாம் காளியம்மாளுக்கு ஒன்று விடாமல் கேட்டது. அது அவள் உள்ளத்தில் புகுந்து புதிய வழியில் வேலை செய்ய வாரம்பித்தது. தூக்கத்திலிருந்த அவளை யாரோ தட்டியெழுப்பி, ‘பார். எத்தனை சந்தோஷம் உனக்காகக் காத்திருக்கிறது,’ என்று சொல்வது போலிருந்தது. ‘சின்னம்மாள் பேச்சில் எத்தனை சந்தோஷம்! எத்தனை ஆனந்தம் பொங்குகிறது! எல்லாவற்றிற்கும் மனதுதானே காரணம்? ஐந்து ரூபாய்ச் சேலையைக் கட்டிக்கொண்டு அவள் எவ்வளவு சந்தோஷப்படுகிருள். நான்?’ என்று காளியம்மாள் தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். “நான் 115 ரூபா சேலையிருந்தும் அதுவும் தகப்பன் அடுத்த ஆடி நோம்புக்கு நான் கேட்ட அந்தச் சீலேயே வாங்கிக் கொடுக்கிறேனென்று சொல்லியும் விசனப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இது நல்லா இருக்கிறதென்றுதானே அவர் வாங்கி வந்தார். பணத்தையா பார்த்தார். நான் பிரியமா உடுத்திக்குவேனென்று தானே வாங்கியிருக்கிருர்? நான் எவ்வளவு முட்டாள்தனமாக நடந்துவிட்டேன். சே! உடனே போய்க் குளித்துவிட்டுச் சீலேயைக் கட்டிக்கொள்ளுகிறேன். தலேவலி தீர்ந்து போச்சென்று சொல்லிவிட்டால் போகிறது. அவரும் என்னென்ன நினைத்துக் கொண்டிருக்கிருரோ? அவருக்குத் தெரியாமல் போய்விட்டால் நல்லது.”

காளியம்மாள் சந்தோஷமாக எழுந்தாள். அதே சமயத்தில் கருப்பாயி அவளைத் தேடிக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தாள்.

“அம்மா, எனக்கு இந்தச் சீலேயே போதும்.”

“இல்லே, வா; நம்ம துரைசாமிபோய் நீ கேட்ட சீலேயை வாங்கிக்கிட்டு வந்துட்டான்.”

மிட்டாய்க்காரன்

"பாசரகூ"

'டிடிங் டிடிடிங், டிடிங் டிடிடிங்' என்று கையி லிருந்த மணியை வீசிக்கொண்டு சென்றான் அந்த மிட்டாய்க்காரன். அவன் தன் தோளில் ஒரு கொம்பைச் சாய்த்து வைத்திருந்தான். கொம்பின் முனையில் வைக்கோல் பிரி சுற்றியிருந்தது. அதில் பல குச்சிகள் சொருகப்பட்டிருந்தன. அக்குச்சி களின் முனையில் பல நிறத்தில் தயாரித்த மிட்டாய்க ளிருந்தன. மிட்டாய் வகைகளில் மிளகாய், பாம்பு, தேள் போன்ற உருவங்களுமிருந்தன. மிட்டாய்க் காரன், "பச்சை பச்சை மிளகாய், பாங்கான மிள காய், படபடத்தான் தோட்டத்திலே பறித்துவந்த மிளகாய், கிடுகிடுத்தான் தோட்டத்திலே கிள்ளி வந்த மிளகாய், தம்படிக்கு ஒண்ணுதான், வாயிலே போட்டால் தண்ணிதான்," என்று தன் சொந்த ராகத்தில் பாடிக்கொண்டு சென்றான். அவன் சாரீரம் நன்றாக இருந்ததோ இல்லையோ, ஆனால் அவன் மிளகாய்ப்பாட்டு, தேள் பாட்டு முத லியவைகளைப் பாடும்பொழுது இன்னொரு தரம் அவனை அதே பாட்டுகளைத் திரும்பப் பாடச்சொல்லி கேட்கலாம் போலிருக்கும். அவனுடைய பாட்டு களில் ஒருவித கவர்ச்சி இருந்தது. அவன் நான் கைந்து வருஷங்களாக அதே ஊரில் இருந்து வந் தான். அதனால்தானோ என்னவோ அவனுடைய மணியோசையும் அவன் குரலும் அந்த ஊரிலுள்ள குழந்தைகளுக்கு நன்றாகத் தெரியும். பெரியவர் களுக்கும் அவனை நன்றாகத் தெரியுமென்று சொல்ல லாம்.

அவனுடைய பாட்டு எல்லோரையும் வசீ கரித்து வந்தது. அவன் விற்கும் இனிமையான

மிட்டாய்கள் முக்கியமாய் சிறுவர்களை வசீகரித்து வந்தது. அவனைப் பார்த்தால் குழந்தைகளனைவருக்கும் சந்தோஷம். அவனுக்கும் குழந்தைகளிடம் அதிக அன்பு. அவனுக்கு எப்பொழுதும் சிரித்த முகம்தான். குழந்தைகள் மிட்டாய் வாங்கும்பொழுதெல்லாம் அவர்களுக்கிஷ்டமான மிளகாய்ப் பாட்டு, தேள் பாட்டு முதலியவைகளைப் பாடச் சொல்லுவார்கள். அவனும் சளைக்காமல் அவர்களிஷ்டப்படியே பாடுவான். அவன் இரண்டு தெருக்களுக்கு அப்பால் வரும்பொழுதே அவன் மணியோசையைக் கேட்டு சிறுவர்கள் தெருவில் அவன் வரவுக்காகக் காத்திருப்பார்கள். சிலர் மணியோசைவரும் திக்கை நோக்கிச் செல்வார்கள்.

சக்ரவர்த்தி ரெட்டியார் என்பவர் அவ்வூரில் பெரிய பணக்காரர். அவருக்கு நெடுநாளாகக் குழந்தையில்லாமல் மூன்று வருஷங்களுக்கு முன் ஒரு குழந்தை பிறந்தது. சின்ன ராமுவை ரெட்டியார் நிரம்பவும் செல்வமாக வளர்த்து வந்தார். குழந்தையைப் பொன்னலான ஆபரணங்களால் அலங்கரித்தார்.

ஒரு நாள் மிட்டாய்க்காரன் ரெட்டியார் வீட்டு வழியாக மிட்டாய் விற்றுக்கொண்டு போன பொழுது, குழந்தை ராமு தெருவில் நின்றுகொண்டு கொச்சைத் தெலுங்கில், ''மிட்டாய், மிட்டாய்,'' என்று கத்தினன். எல்லோரிடத்திலும் பிரியமாக நடந்து கொள்ளும் மிட்டாய்க்காரன் குழந்தை ராமுவை அணுகி, ''உனக்கு என்ன மிட்டாய் வேண்டும்?'' என்று அன்புடன் கேட்டான்.

குழந்தை பச்சை வர்ணத் தேள் மிட்டாயைக் காண்பித்தான்.

''எங்கே துட்டு எடு. எத்தனை வேண்டும்?''

குழந்தை உடைந்த தெலுங்கில், ''துட்டில்லெ, துட்டில்லெ,'' என்று தன் கைகளை விரித்து 'இல்லை' என்பதற்கு அறிகுறியாக ஆட்டியது.

"அம்மாவைக் கேட்டு துட்டு வாங்கி வா, மிட்டாய் தருகிறேன்," என்றான் மிட்டாய்க்காரன் பரிவுடன்.

"மாட்டேன்...ம்ம்...எனக்கு மிட்டாய் குடு... ம்ம்..." என்று குழந்தை சிணுங்கினான்.

மிட்டாய்க்காரன் மிட்டாய் கொடுக்காமல் நகர்ந்து போயிருக்கலாம். ஆனால் குழந்தையைச் சிணுங்கவிட்டுப் போவது அவனுக்குப் பிடிக்காது; அவனுக்குத்தான் குழந்தைகள் என்றால் பிரியமாயிற்றே! குழந்தைகளினால்தான் தன் வயிற்றை வளர்க்க முடிகிறது, குழந்தைகள் இல்லாவிட்டால் தான் உயிருடன் வாழமுடியாது என்பது அவன் எண்ணம். அவன் உண்மையில் குழந்தைகளைத் தெய்வமாகப் பாவித்தான். அதோடு அவனுக்கு நெடு நாளாகக் குழந்தைகளில்லை. பிறர் குழந்தைகளைத் திருப்தி செய்தால்தான் தனக்குக் குழந்தை பிறக்கும் என்பது அவன் நம்பிக்கை. ஒவ்வொரு சமயம் அவன், "உலகத்தில் இவ்வளவு குழந்தைகள் இருக்கின்றனவே, அவர்களுக்கு நான் தினந்தோறும் இனிமையான மிட்டாய்களைக் கொடுத்துச் சந்தோஷப்படுத்துகிறேனே; என் இனிமையான மிட்டாய்களைச் சாப்பிடக் கொடுத்துவைக்க எனக்கு ஒரு குழந்தை இல்லையே," என்று ஏங்குவான். பிறகு அவனே தன்னை, "சீ, நான் பிறருடைய குழந்தைகளைப் பார்த்துப் பொறாமை படக்கூடாது. நமக்கு அந்தப் பாக்கியமில்லை. கடவுளுக்குக் கிருபையில்லை," என்று சொல்லித் தேற்றிக்கொள்வான்.

குழந்தை ராமு சிணுங்கியபொழுது, தேள் மிட்டாய் ஒன்றையெடுத்து அவன் கையில் கொடுத்து விட்டுத் திரும்பினான். குழந்தை ராமு அழுது, காலை உதறிக்கொண்டே, "இன்னொண்ணு வேணும்," என்று கத்தினான். மிட்டாய்க்காரன் மனந்தாளாமல் இன்னொரு கையில் மிளகாய் மிட்டாய் ஒன்றைக் கொடுத்துவிட்டு, "போனால் போகிறது; இரண்டு தம்படிதானே; அதனால் ஒரு குழந்தையாவது சந்

தோஷமடையட்டும்,” என்று தனக்குள் எண்ணிக் கொண்டு சந்தோஷமாக மணியை யடித்துக் கொண்டே போய்விட்டான்.

அவன் இரண்டு தெருக்கள் தாண்டியிருப்பான். அவன் மணியோசை மட்டும் கேட்டது. குழந்தை யின் தாயார் வெளியே வந்தாள். குழந்தையின் கையிலிருந்த மிட்டாயைப் பார்த்துவிட்டு, தெலுங் கில், “ராமி, யாருடா உனக்கு மிட்டாய் கொடுத் தது?” என்று கேட்டுக்கொண்டே அவனருகில் வந்தாள். குழந்தை ராமு மிட்டாய்க்காரன் போன வழியைக் காண்பித்து குழந்தை பாஷையில் மிட் டாய்க்காரன் கொடுத்ததாகச் சொன்னன். தாயார் அவன் கையைக் கவனித்தபொழுது, குழந்தை விரலி லிருந்த மோதிரத்தைக் காணவில்லை.

“ராமி, உன் மோதிரம் எங்கேடா?” என்று கேட்டாள் அவன் தாயார் மனப்பதைப்புடன். அவ னுக்குத் தெரியா தென்னும் பாவனையாகத் தலையை யசைத்தான் ராமு.

“ராமி, மிட்டாய்க்காரனிடம் கொடுத்து விட் டாயா?”

அதற்கும் இல்லை என்று தலையை யசைத்தான்.

“இங்கே வாங்கோ! குழந்தை கையிலிருந்த மோதிரத்தைக் காணேம்,” என்று கத்தினள். உள்ளே இருந்த சக்ரவர்த்தி ரெட்டியார் வெளியே ஓடிவந்தார். வீட்டிலிருந்த வேலைக்காரர்களெல்லாம் வந்து கூடிவிட்டார்கள். குழந்தையைப் பலவித மான கேள்விகள் கேட்டார்கள். எல்லாவற்றிற்கும் குழந்தை ராமு இல்லையென்று தலையை யசைத்தான். வீடெல்லாம் மோதிரத்தைத் தேடினர்கள்! அகப் படவில்லை. ரெட்டியார் அந்த மிட்டாய்க்காரனைப் பிடித்து வரும்படி உத்தரவிட்டு விட்டு, போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு ஒரு ஆளை அனுப்பினர்.

முதலில் ஸப் இன்ஸ்பெக்டர் வந்தார். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் மிட்டாய்க்காரனை வேலையாட்கள் இழுத்து வந்தார்கள். ஸப் இன்ஸ்பெக்டர் மோதிரத்தைக் கொடுத்து விடும்படி மிட்டாய்க்காரனைக் கேட்டார். மிட்டாய்க்காரன், "மோதிரத்தை நான் எடுக்கவில்லை, எஜமான்" என்று சொன்னான்.

"குழந்தையிடம் எவ்வளவு பணம் வாங்கிக் கொண்டு மிட்டாயைக் கொடுத்தாய்?" என்று ஸப் இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"துட்டு கிட்டு எதுவும் வாங்கிக் கொள்ளலே, எஜமான்," என்று பதில் சொன்னான்.

"அதாவது நீ துட்டு வாங்கவில்லை, குழந்தை விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றிக்கொண்டு பதிலுக்கு மிட்டாய் கொடுத்தாய், அப்படித்தானே?"

"இல்லிங்க, எஜமான், நான் மிட்டாயைச் சும்மா கொடுத்தேன்."

"பார்த்தீர்களா மிஸ்டர் ரெட்டியார்! எவனாவது மிட்டாயைச் சும்மா கொடுப்பானா இந்தக் கஷ்ட காலத்திலே? இதிலிருந்தே எனக்குப் புலப்படுகிறது இவன்தான் மோதிரத்தை எடுத்தவன் என்று," என்று சொல்லிவிட்டு கலகலவென்று சிரித்தார் ஸப் இன்ஸ்பெக்டர் ரங்கசாமி நாயுடு. அவருடன் சேர்ந்து ரெட்டியாரும் சிரித்தார். வெங்கலக் கடையில் யானை புகுந்தது போலிருந்தது அவர்களுடைய சிரிப்பு. இவர்களின் சிரிப்பை அந்த தளம்போட்ட ரெட்டியார் வீடு எதிரொலித்து 'ஹோ' என்ற சத்தத்தையுண்டாக்கியது. அது மிட்டாய்க்காரனுடைய காதுகளுக்குப் பேய்க்கூட்டங்கள் கத்துவது போல் கேட்டது.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அந்தத் தெருவிலிருந்த சிறுவர்களெல்லாம் ரெட்டியார் வீட்டின் முன் கூடி விட்டார்கள். மிட்டாய்க்காரன் தூணோடு கட்டப்பட்டிருந்ததைக் கண்டு சிறுவர்களில் சிலர் கண்ணீர் விட்டார்கள். அவர்களில்

ஒருவன் மெதுவாக, "இன்ஸ்பெக்டர் மூஞ்சைப் பாருடா......நம்ப வண்ணூமூட்லெ இருக்குதே...... அது போல இருக்குது," என்று சொல்லவே மற்றச் சிறுவர்களெல்லாம் கல கல வென்று சிரித்தார்கள். மிட்டாய்க்காரன், "இவர்களுக்கெல்லாம் மிட்டாய் கொடுக்கப் போய் என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கிறூர்கள் .....சே, குழந்தைகள் மனம் இவ்வளவுதானு?" என்று இவ்வாறெல்லாம் தப்பிதமாக எண்ணிக்கொண்டான். இவர்கள் சிரித்ததைக் கேட்ட ஸப் இன்ஸ்பெக்டர், "304.........அந்தப் பசங்களை யெல்லாம் பிடிச்சு தூணிலே கட்டு," என்று கத்தினுர். சிறுவர்கள் ஒரே கோஷ்டம் போட்டுக் கொண்டு நாலா பக்கமும் ஓடினுர்கள்.

மிட்டாய்க்காரனைப் போலிஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்ருர்கள். சிறுவர்களில் சிலர் அவனைப் பின் தொடர்ந்தார்கள். மிட்டாய்க்காரனை ஸ்டேஷனில் ஜவான்கள் அடித்து மிரட்டிக் கேட்டார்கள். அவன் அடி தாங்க முடியாமல் கூச்சல் போட்டான். அக்கூச்சலைக் கேட்டு வெளியே இருந்த சிறுவர்கள் நிஜமாகவே அழவாரம்பித்து விட்டார்கள். அவர்களுடைய உள்ளங்கள் மிட்டாய்க்காரனுடைய உள்ளத்தோடு அவ்வளவு தூரம் கலந்து போயிருந்தது.

கோர்ட்டில் விசாரணை நடந்தது. மிட்டாய்க்காரனுக்கு எத்தனையோ வருஷம் கடுங்காவல் விதித்தார் ஜட்ஜு. அதைக்கேட்ட மிட்டாய்க்காரன், "ஐயோ, இவ்வளவு காலமும் இந்தக் குழந்தைகளின் முகங்களைப் பார்க்க முடியாதே," என்று ஏங்கினுன்.

காலச் சக்கரம் சுழன்றது. நாட்கள், மாதங்கள் வருஷங்கள் ஓடின. இருபது வருஷங்கள் கழிந்தன. குழந்தை ராமு ராமி ரெட்டியாராகி விட்டான். அவன் சென்னையில் படித்து முடிந்தபின் ஊருக்குத் திரும்பினுன். அவனுக்குத் தன் வீட்டைப் பார்ப்பதற்குப் பிடிக்கவில்லை. தற்காலத்துக்குத்

தகுந்ததாயில்லை. ஆகையால் அவன் தன் வீட்டிற்கு முன் ஒரு 'ஹால்' போட வேண்டு மென்று அதற்கு வேண்டிய அஸ்திவாரம் போடும்படி உத்தரவிட்டான். வேலைக்காரர்கள் பூமியில் தோண்டும் பொழுது மண்ணில் சின்ன மோதிரம் ஒன்று அகப்பட்டது. அவர்கள் அதை ராமி ரெட்டியிடம் கொடுத்தார்கள். அவன் அதைத் தன் தாயிடம் எடுத்துச் சென்று, "அம்மா இதோ பார், ஒரு சின்ன மோதிரம் அகப்பட்டது," என்று சொல்லி அதை அவள் கையில் கொடுத் தான்.

"அட! இது எங்கே அகப்பட்டது? இது நீ சின்னவனா யிருந்த பொழுது போட்டிருந்த தாச்சே?" என்றாள் ஆச்சரியத்தோடு.

"மண்ணில் அகப்பட்டது அம்மா."

"சே, பாவம்; இந்த மோதிரத்தை ஒரு மிட் டாய்க்காரன் எடுத்துக் கொண்டா னென்று எண்ணி அவனை.." என்று சொல்லிக் கொண்டே வந்தவள் சட்டென்று பேச்சை நிறுத்தினாள். எத னாலோ அவள் உடல் நடுங்கியது.

"என்னம்மா, அவனுக்கு என்ன நேரிட்டது?" என்று கேட்டான் ராமிரெட்டி.

"அதோ கேட்கிறது பார் மணி சத்தம், அது அந்த மிட்டாய்க்கார னுடையதுதான்," என்று சொல்லிக்கொண்டே வெளியே ஓடினாள். தூரத் தில் கேட்டுக்கொண்டிருந்த மணியோசை வரவர நெருங்கியது.

"அதோ வந்துவிட்டான் மிட்டாய்க்காரன்..." என்று கத்திக்கொண்டே மணியோசை வந்த பக்கம் திரும்பிப் பார்த்தாள் ராமியின் தாயார். ஆனால், வேறு மிட்டாய்க்காரன் ஒருவன் வந்து கொண் டிருந்தான். சிறுவர்கள் அவன் பின்னால் குதூகலத் துடன் குதித்துக் கொண்டு ஓடி வந்தார்கள்.

Printed at Commercial Printing & Publishing House, G. T., Madras.

பாசரசு: வைகாசி மலரில்

- ஆர். ஷண்முகசுந்தரம்
- ஆர். திருஞானசம்பந்தம்
- கு. ப. ராஜகோபாலன்
- க. நா. சுப்ரமண்யம்
- அ. கி. ஜெயராமன்
- து. ராமமூர்த்தி
- "சுகி"
- கே. ஸ்ரீ:
- பெ. தூரன்
- ஸ்ரீமதி அபயாம்
- ஸ்ரீமதி கோமதி சுப்ரமண்யம்
- ஸ்ரீமதி சரசுவதி பாசு
- ஸ்ரீமதி விசாலம்
- பாசரசு

தனிப் பிரதி அணா 12

இங் டைமண்ட்

ரிஜிஸ்டர்ட் நெ. 3666

சிக்கன செலவில் சீமை கமலச் சிறப்பு



அசல் வைரங்களின் கட்டிங்கும் பாலிஷும் கூடிய பலவர்ணங்களுடன் பிரகாசிப்பதால் இதனை அசல் வைரங்களென்றே மதிப்பிடுகிறார்கள். இங் டைமண்ட் எங்களிடம்தான் கிடைக்கும். உத்திரவாதத்துடன் அனுப்பப்படும். ஒருமுறை ஆர்டர் செய்து பார்த்தால் உண்மை விளங்கும்.

கல் 1-க்கு ரூ. 1-8-0 (தபால் சார்ஜ் பிரத்தியேகம்)

165 வருஷங்களாய் நம்பிக்கையுடன்
வியாபாரம் செய்துவரும்

பி. கோபாலஸ்வாமி நாயுடு அண்டு சன்ஸ்

ஆபரண கற்கள் வியாபாரம்

பறங்கிமலை போஸ்ட், மதறாஸ்

பாசரசு

மாதம் ஒரு புத்தகம்

- கதை
- கவிதை
- கட்டுரை
- நாடகம்

முதலிய சிறந்த விஷயங்களுடன் ஒவ்வொரு தமிழ் மாதமும் வெளி வருகிறது

தனிப் பிரதி
அணா 12

பதிப்பாசிரியர் :
எம். எஸ். பாசு

உதவி பதிப்பாசிரியர் :
ஸ்ரீமதி சரசுவதி பாசு

பாசரசு காரியாலயம்
பெரம்பூர் — சென்னை

Cover Printed at P. A. S. Press, Post Box 349, Mount Road, Madras